Registered No. M. 2330 "SIDDHANTHAM"
Vol. 35—No. 5

CONNEMARA PUBLIC LIBRARY
15 MAY 1962

# சித்தாந்தம்

சைவ சித்தாந்த மகா சமாஜத் திங்கள் வெளியீடு

'தன்க டன்னடி யேனையுந் தாங்குதல்
என்க டன்பணி செய்து கிடப்பதே'

மலர் 35 | சுபகிருது வைகாசி 1962 மே | இதழ் 5

உள்ளுறை

| | பக்கம் |
|---|---|
| தமிழ்ச் சமர்த்தர் ... | 113 |
| திருமழபாடி ... | 121 |
| திருவாசகம்—பிஞ்ஞகன் ... | 128 |
| சங்க நூல்களில் சமயம் ... | 132 |
| இந்திய தத்துவஞானம் ... | 141 |

பத்திராசிரியர் : புலவர் - முருகவேள், எம். ஏ., எம். ஓ. எல்.

உதவிப் பத்திராசிரியர் : மு. நாராயணசாமி

சைவ சித்தாந்த மகா சமாஜம்

12, கிழக்கு மாடவீதி, மயிலாப்பூர், சென்னை-4.

ஆண்டு சந்தா ரூபா 3 தனிப்பிரதி அணா 4

# சமாஜ நிகழ்ச்சிகள்

22. 5. 62 செவ்வாய்க்கிழமை மாலை 7 மணிக்குத் திருஞான சம்பந்தர் திருநட்சத்திரவிழா திருமயிலை கபாலீசுவரர் கோயிலில் நடைபெறும். திரு P. ஆலாலசுந்தரம் செட்டியார் M. A. அவர்கள் முதலியோர் சொற்பொழிவாற்றுவார்கள்.

27. 5. 62 சமாஜச் செயற்குழுக் கூட்டம் காலை 9. 30 மணிக்கு சமாஜஅலுவலகத்தில் நடைபெறும். சமாஜ வரவு செலவு கணக்கு, மலேயாவிலிருந்து வந்த தொகை முதலியவை பற்றி ஆலோசிக்கப்படும். செயற்குழு உறுப்பினர் இதையே அழைப்பாகக் கொண்டு வருகை தருமாறு வேண்டப் படுகின்றனர்.

G. கலியாணம்
சமாஜச் செயலன்.

"சைவம்" இதழ் வெளியீட்டு விழா : 1898 இல் திரு. இருக்கம் ஆதிமூல முதலியார் போன்ற பெருமக்களால் தோற்றுவிக்கப்பட்டுக் கடந்த 64 ஆண்டுகளாகத் தொண்டாற்றி வரும் சென்னைச் சிவனடியார் திருக்கூட்டச் சார்பில், 1915 இல் தோன்றி 10 ஆண்டுகள் சிறப்புற நடந்து வந்த "சைவம்" இதழ், குருகுலம் அழகர் அடிகள் (ஆசிரியர் இளவழகனார்) அவர்களை ஆசிரியராகக் கொண்டு, மீண்டும் தொடங்கப் பெற்றுள்ளது. அதன் வெளியீட்டுவிழா, 26-4-62 வியாழன் அன்று சென்னை தங்கசாலைத் தெரு தொண்டைமண்டலம் உயர்நிலைப்பள்ளியில் மிக்க சிறப்புடன் நிகழ்ந்தது. சிவத்திரு அழகரடிகள், நீதிபதி கனம் சு. கணபதியா பிள்ளை B. A. B. L., அமைச்சர் திரு நல்ல சேனாபதி சர்க்கரை மன்றாடியார், அறநிலைய ஆணையர் திரு. எம். எஸ். சாரங்கபாணி முதலியார், B. A. B. L., திரு. கே. இராமதாஸ் M. L. C. ஆகிய பெருமக்கள் பலர் வெளியீட்டு விழாவிற்கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

Reg. M. 2330

உ
சிவமயம்

# சித்தாந்தம்

ஆனைமுகன் ஆறுமுகன் அம்பிகைபொன் னம்பலவன்
ஞானகுரு வாணியைஉள் நாடு.

மலர் 35 | சுபகிருது வைகாசி 1962 மே | இதழ் 5

## தமிழ்ச் சமர்த்தர்

ந. ரா. முருகவேள்

முன்னுரை

'தமிழ்ச் சமர்த்தர்' என்னும் தொடர், தாயுமான அடிகளால் வழங்கப்பெற்ற தொனருரும். 'சமர்த்தர்' என்னும் சொல் செயற்கருஞ் செயல்களை எளிய இனிய முறையில் திறம்படச்செய்து முடிக்கவல்ல பேராற்றல் மிக்கவர்களைக் குறிக்கும். சமர்த்து எனினும், சாமர்த்தியம் எனினும் ஒக்கும். 'வித்தகர்' 'சதுரர்' 'வல்லாளர்' என்னும் வேறு பிறசொற்களும், இப்பொருளையே யுணர்த்தும் சிறப்புடையன.

" நத்தம்போற் கேடும் உளதாகும் சாக்காடும்
வித்தகர்க் கல்லால் அரிது"

என்னும் திருக்குறளில் திருவள்ளுவரால் வித்தகர் என்ற சொல்லும்

" தந்ததுன் றன்னைக் கொண்டதென் றன்னைச்
சங்கரா ஆர்கொலோ சதுரர் ?"

என்ற திருவாசகப் பாடலில் மாணிக்கவாசகரால் சதுரர் என்ற சொல்லும்,

---

கொழும்பு விவேகானந்த சபையின் வைரவிழாவை ஒட்டி 20, 21, 22—4—1962 தேதிகளில் நடைபெற்ற திருமுறை மாநாட்டில் திருக்கேதீச்சுரத் திருப்பணிக் குழுத் தலைவர் திரு. சேர் கந்தையா வைத்தியநாதன் அவர்கள் தலைமையில், 22—4—62 அன்று மாலை நிகழ்த்திய சொற்பொழிவின் சுருக்கம்.

" அந்தணனைத் தஞ்சமென்று ஆட்பட்டார் ஆழாமே
வந்தணைந்து காத்தளிக்கும் வல்லாளன் "

என்ற பாடலில் காரைக்கால் அம்மையாரால் வல்லாளன் என்ற சொல்லும், அழகிய இனிய அரிய முறையில் இலக்கிய நலம் பொலிய ஆங்காங்கே எடுத்தாளப் பெற்றிருத்தல் காணலாம்.

**தாயுமானவர் :**

தாயுமான சுவாமிகள் தமிழ்கூறும் நல்லுலகம் போற்றும் தலைசிறந்த ஞானத் தவமுனிவர். வேதாந்த சித்தாந்த சமரச ஞான வித்தகச் செல்வர். இறையருளனுபவம் கைவரப்பெற்ற இணையற்ற அரும்பெருஞ் சான்றோர். தேவார திருவாசகத் திருமுறைகளையெல்லாம் ஓதி ஓதியுணர்ந்து உய்வும் உயர்வும் எய்தியவர். அவர்,

" தேவரெலாம் தொழச்சிவந்த செந்தாள் முக்கட்
செங்கரும்பே ! மொழிக்குமொழி தித்திப் பாக
மூவர்சொலும் தமிழ்கேட்கும் திருச்செ விக்கே
மூடனேன் புலம்பியசொல் முற்று மோதான் ?"

என அருளிச் செய்திருத்தல் கொண்டு, மூவர் தமிழ் ஆகிய தேவாரத் திருமுறைகள் மீது தாயுமானவர் கொண்டிருந்த பெருமதிப்பும் பேரன்பும் இனைய என்று எண்ணியுணரலாம். தேவார திருவாசகத் திருமுறைகளையெல்லாம், தாயுமானவர் ஆழ்ந்து ஆராய்ந்து பல்காற் பயின்று ஓதியுணர்ந்து அனுபவித்து மகிழ்ந்தவர் அதனாலேயே அவர், 'மொழிக்கு மொழி தித்திப்பாக அமைந்தது மூவர் தமிழ்' என்று குறிப்பிடுகின்றார்.

**ஓதியுணர்ந்த உயர் அனுபவம் :**

தேவார திருவாசகத் திருமுறைகளையெல்லாம் ஓதி ஓதியுணர்ந்து உள்ளம் களிதுளும்பிய தாயுமானவர்க்குச் சுந்தரமூர்த்தி சுவாமிகளின் பாடல்களில் மிகவும் அழுந்திய ஈடுபாடு இருந்தது.

"தேன்படிக்கும் அமுதாம்நின் திருப்பாட்டைத்
தினந்தோறும்
நான்படிக்கும் போதென்னை நான்அறியேன், நாஒன்றோ ?

ஊன்படிக்கும் உளம்படிக்கும் உயிர்படிக்கும் உயிர்க்குயிரும்
தான்படிக்கும் அனுபவம்காண் தனிக்கருணைப்
பெருந்தகையே''

என அண்மைக் காலத்தில் இராமலிங்க அடிகளார் அருளிச் செய்திருத்தல் போலவே, தாயுமானவரும் சுந்தர மூர்த்தி சுவாமிகளின் தேவாரப் பாடல்களைத் தினந்தோறும் ஓதி ஓதி இன்புற்றிருப்பார் என்பதில் ஐயமில்லை. சுந்தரரின் பாடல்கள் பல தாயுமானவரின் நெஞ்சைப் பெரிதும் கவர்ந்திருக்கின்றன. சிறப்பாக,

"ஏழிசையாய் இசைப்பயனாய் இன்னமுதாய் என்னுடைய
தோழனுமாய் யான்செய்யும் துரிசுகளுக்கு உடனாகி
மாழைஒண்கண் பரவையைத்தந் தாண்டானை மதியில்லா
ஏழையேன் பிரிந்திருக்கேன் என்ஆரூர் இறைவனையே''

என்ற பாடல், அவர்தம் திருவுள்ளத்தைப் பெரிதும் கொள்ளைகொண்டது. தமிழகச் சான்றோர்கள் அனை வரின் உள்ளங்களையுமே இத் திருப்பாடல் பெரிதும் கொள்ளை கொண்டுவிட்டதென்னும் உண்மையை,

"ஏழிசையாய் இசைப்பயனாய் இன்னமுதாய் என்னுடைய
தோழனுமாய் என்றுமுன்நீ சொன்னபெருஞ்
சொற்பொருளை
ஆழநினைந் திடில்அடியேன் அருங்கரணம்
கரைந்துகரைந்து
ஊழியில்ஒன் றுவதுகாண் உயர்கருணைப் பெருந்தகையே''

எனவரும் திருவருட்பாவினால் நாம் தெளிதல் கூடும். இராம லிங்க அடிகளாரைப் போலவே, தாயுமான அடிகளாரும் 'ஏழிசையாய் இசைப்பயனாய்' எனத் தொடங்கும் சுந்தர ரின் தேவாரப் பாடலில் தம் நெஞ்சம் பறிகொடுத்து வியந்து மகிழ்ந்தனர் என்னும் செய்தி,

"என்னுடைய தோழனுமாய் என்ற திருப்பாட்டின்
நன்னெறியைக் கண்டு உரிமை நாம்செய்வ தெந்நாளோ?''

எனத் தாயுமானவர் அருளிச் செய்திருத்தல் கொண்டு உணரப்படும். இங்ஙனம் சுந்தரரின் தேவாரப் பாடல் களை நாடோறும் ஓதி ஈடுபட்டு நின்று, அவர்தம் அருமை பெருமைகளை யெல்லாம் அறிந்து மகிழ்ந்தே தாயுமானவர் சுந்தரமூர்த்தி சுவாமிகளைத் 'தமிழ்ச் சமர்த்தர்' என வியந்து போற்றிச் சிறப்பித்துக் குறிப்பிடுகின்றார்.

"பித்தர்இறை என்றறிந்து பேதைபால் தூதுஅனுப்பு
வித்த தமிழ்ச்சமர்த்தர் மெய்புகழ்வது எந்நாளோ?"

**சூத்திரமும் பாஷ்யமும் :**

தமிழ்ச் சமர்த்தர்' என்னும் தொடர் சிறியது; ஆனால் அதன் பொருட் குறிப்பும் பரப்பும் மிகப் பெரியன. சுந்தரரைப் பற்றித் தம்முடைய உள்ளார்ந்த கருத்துக்கள் அனைத்தினையும், தாயுமானவர் இச்சிறிய தொடரின்கண் செறித்துக் கூறித் தெளிவுறுத்துகின்றார்! இவ்வாற்றால் இதனை ஒரு 'சூத்திரம்' என்று சொல்லுதலும் தகும். வாதராயணரின் பிரமசூத்திரத்திற்குச் சங்கரர் இராமானுசர் மத்துவர் முதலிய பலர் பல சிறந்த பேருரை (பாஷ்யம்) களைக் கண்டதுபோல, நாமும் இத்தொடருக்குப் பல சிறந்த பொருட் குறிப்புக்களை நம் தலத்திற்கும் தகுதிக்கும் ஏற்பக் கொள்ளுதல் கூடும். ஈண்டைக்கு வேண்டிய அளவில் ஒரு சிறிது மட்டும் ஆராய்வோம்.

**தூது போக்கிய தொண்டு :**

வேதாகமங்கள் எல்லாம் இறைவனைப் பேரறிவும் பேராற்றலும் உடையவன் என்று புகழ்ந்து கூறி வியக்கின்றன. ஆனாற் சுந்தரரோ, அன்பர்களின் அன்பிற்குக் கட்டுண்ணும் அளவிலா எளிமை, அடியார்களின் குற்றங் குறைகளைக் கண்டுகொள்ளாத அறியாமை, பச்சிலையும் நீரும் தூவி வழிபடும் சிறுசெயலுக்கே பெரிதும் மகிழ்ந்து பேரின்ப வீடு அளித்தருளும் 'ஆசுதோஷி' (அற்பத்திற்கும் அகம் மிக மகிழ்பவன்) ஆகும் தன்மை முதலிய பண்புகள் பல கருதி, இறைவனைப் பித்தர் என்று அறிந்து கொண்டார். அதுவே ஒரு பெருஞ் சாமர்த்தியம்! அம்மட்டோ! தேவர்களையெல்லாம் ஏவல்கொள்ளும் சிறப்புடைய சிவபெருமானைத் தாம் ஏவல்கொண்டார்—பித்தனைப் பேதைபால் தூது அனுப்பிவைத்தார். தலைவரெல்லாம் தலைவணங்கும் தனிப்பெருந் தலைவனாகிய சிவபெருமானையே ஏவல்கொண்டமை, ஒரு பெருஞ் சதுரப்பாடேயாகும் அன்றோ? இச் சமர்த்தினையே,

"அரவகல் அல்குலார்பால் ஆசைநீத் தவர்க்கே வீடு
தருவம்என் றளவில் வேதம் சாற்றிய தலைவன் தன்னைப்

பர்வைதன் பக்கல் மேனுள் கழுதுகண் படுக்கும் பானுள்
இரவினில் தூது கொண்டோன் இணையடி முடிமேல்
வைப்பாம்"

"மோகம் அறுத்திடின் நாம் முத்தி கொடுப்பதென
ஆகமங்கள் சொன்ன அவர்தம்மைத் - தோகையர்பால்
தூதாகப் போகவிடும் வன்தொண்டன் தொண்டுதனை
ஏதாகச் சொல்லுவேன் யான்"

"பேருரும் பரவைமனப் பிணக்கறஎம் பெருமானை
ஊரூரும் பலபுகல ஓரிரவில் தூதன்எனத்
தேரூரும் திருவாரூர்த் தெருவுதொறுந் நடப்பித்தாய்
ஆரூர நின்பெருமை அயன்மாலும் அளப்பரிதே"

எனச் சான்றோர்கள் பற்பலரும் பாராட்டி வியந்திருத்தல் அறிந்தின்புறுதற்குரியது.

"ஒருமணத்தைச் சிதைவுசெய்து வல்வழக்கிட்டு
ஆட்கொண்ட உவனைக் கொண்டே
இருமணத்தைக் கொண்டருளிப் பணிகொண்ட
வல்லாளன்..."

எனவரும் காஞ்சிப் புராணச் செய்யுளிற் சிவஞான சுவாமிகளால் குறிப்பிடப் பெற்றிருக்கும் கருத்தும் ஈண்டைக்கு மிகவும் பொருத்தம் உடையது.

## திருத்தொண்டத் தொகையின் திறம் :

சுந்தரரின் தமிழ்ச் சமர்த்துக்குச் சிறந்த எடுத்துக் காட்டாதற்கு, அவர் அருளிச்செய்த திருத்தொண்டத் தொகை ஒன்றே சாலும்! அறுபான் மும்மை நாயன் மார்களின் நாடு நகரம் குலம் வரலாறு கொள்கை தொண்டு அருள்நிகழ்ச்சி ஆகிய பலவற்றையும் திறந் தெரிந்து சுருங்க விளக்கி, அவ்வாற்றால் நம்பியாண்டார் நம்பிகளின் திருத்தொண்டர் திருவந்தாதிக்கும், சேக்கிழார் பெருமானின் திருத்தொண்டர் புராணத்திற்கும் அடிப் படை வகுத்தளித்தமை, சுந்தரரின் தமிழ்ச் சமர்த்தின் விளைவேயாகும். இஞ்ஞான்றைச் சைவ நெறியின் வளர்ச்சிகளுக்கும் வரலாற்றுக்கும் எல்லாம் மூலகாரண மாகத் திகழ்வது திருத்தொண்டத் தொகையே! அதனல் அன்றே, "மூலமான திருத்தொண்டத் தொகைக்கு முதல்

வராய் இந்த ஞாலம் உய்ய எழுந்தருளும் நம்பியாரூரர்" எனச் சேக்கிழார் பெருமான் சுந்தரரைப் பாராட்டிக் கூறி, அவரையே தமது பெரியபுராணக் காப்பியத் தலைவர் ஆகவும் அமைத்துக்கொண்டு சிறப்பித்தருளினார், திருத்தொண்டத்தொகையில் சுந்தரர் 'இல்லையே என்னாத இயற்பகை' 'வெல்லுமா மிகவல்ல மெய்ப்பொருள்' 'கலைமலிந்த சீர்நம்பி கண்ணப்பா' 'நாட்டம் மிகு தண்டி' 'மும்மையால் உலகாண்ட மூர்த்தி' 'மறவாது கல்லெறிந்த சாக்கியன்' 'திருநீலகண்டத்துக்குக் குயவனார்—பாணனார்' என்பன போன்று அருளிச் செய்துள்ள அரிய தொடர்கள் எல்லாம், அவ்வந் நாயன்மார்களின் அருமை பெருமைகளையெல்லாம் எத்துணை நுணுக்கமாகத் திறம் தெரிந்து சுட்டிக்காட்டிச் சிறப்பித்துத் தெளிவுறுத்துகின்றன! இவ்வருமைப்பாடுகளையெல்லாம் செவ்விதின் உணரவல்லார்க்குத் 'தமிழ்ச் சமர்த்தர்' என்ற புகழுரையின் பொருத்தம் புலனாகும் அன்றோ?

**சைவப் பயிர்:**

சுந்தரரின் சமர்த்துக்கு வேறொன்றையும் ஈண்டு நாம் நினைவு கூரலாம். ஒரு நாட்டினர் அடிமைத் தளையினின்று விடுதலை பெறுவது சிறப்பு; பெற்ற விடுதலையைப் பேணிக் காத்து வளர்த்துப் போற்றுவது அதனினும் பெருஞ் சிறப்பு. அதுபோல நாவுக்கரசரும் சமண பௌத்த சமயங்களின் தாக்குதல்களினின்று சைவ சமயத்தை மீட்டு நலஞ் செய்தனர்; அச் சைவ சமயத்தை அவர்களின் அடிச் சுவட்டைத் தொடர்ந்து பேணிக் காத்துப் போற்றிச் சுந்தரமூர்த்தி சுவாமிகளே பெரிதும் வளர்த்தருளினார் எனலாம். பக்தி விதையை விதைத்து அன்பு நீரைப் பாய்ச்சிச் சைவம் ஆகிய பயிர் வளருமாறு நாவுக்கரசரும் ஞானசம்பந்தரும் தொண்டாற்றிச் சென்றனர். அப்பயிருக்கு எருவிட்டுக் களைகட்டு வேலிகோலிக் காவல் புரிந்து, கதிர்கள் முதிரவும் விளைவு பெருகவும் போகம் பெருகவும் வேண்டுவன எல்லாம் செய்தமைத்து நம்மனோர்க்கு உதவி புரிந்தவர் சுந்தரரே யாவார். சுந்தரரின் சமர்த்து மிக்க இவ்வரும்பெருஞ் செயலின் அருமைப்பாட்டினையே:

" படியில் நீடும் பத்திமுதல்
அன்பு நீரிற் பணைத் தோங்கி

வடிவு நம்பி யாரூரர்
செம்பொன் மேனி வனப்பாகக்
கடிய வெய்ய இருவினையின்
களைகட் டெழுந்து கதிர்பரப்பி
முடிவி லாத சிவபோகம்
முதிர்ந்து முறுகி விளைந்ததால்”

எனச் சேக்கிழார் பெருமான் உருவக முகமாக உள்ளுணர்ந்து உவந்து பாடி மகிழ்விக்கின்றார்! சுந்தரர் ‘தமிழ்ச் சமர்த்தர்’ என்பதனை இத்திறம் பற்றியும் நாம் இனி தெண்ணித் துணியலாம்!

**தவநெறி விளக்கம்:**

சுந்தரர் செய்தருளிய சமர்த்தான செயற்கருஞ் செயல்கள் பல. அவற்றுள் தவநெறியின் இயல்பினை அவர் விளக்கியருளிய திறமும் ஒன்று ஆகும். ‘தவம்’ என்னும் சொல்லை நாம் நன்கறிவோம். ‘ஆனால் தவம் என்பது யாது?’ என எவரேனும் வினவின், அதற்கு விடையிறுத்தல் நம்மனோர்க்கு எளிதின் இயல்வதன்று. தவம் என்பது பற்றிப் பலர் பலவேறு கருத்துக்களைக் கூறக்கூடும். சுந்தரரின் காலத்திற்கு மூன்னும் பின்னும் தவநெறி பற்றிப் பலவேறு கருத்துக்கள் உலவி வந்துள்ளன. சமணர்களும் பௌத்தர்களும் பிறரும் மனைவி மக்களைத் துறந்து, உலகியலோடு, பொருந்தாமல் ஐம் பொறிகளைக் கடிந்து அடக்கி வருத்திக் காவியுடுத்தும், மழித்தலும் நீட்டலும் செய்தும், காடு மலை குகைகளில் தனித்திருந்து வாழ்வதே தவம் எனக் கருதிவந்தனர். இன்றும் அங்ஙனமே பலர் கருதி வருகின்றனர். சுந்தரர் திருவெண்ணெய் நல்லூரில் தடுத்து ஆட்கொள்ளப் பெறுகின்றார். பிறகு திருநாவலர் மீண்டு திருப்பதிகம் பாடி இறையருளைப் பரவுகின்றார். பின்னர் அங்கிருந்து திருத்துறையூர் சென்று அணைகின்றார், “தீவினையால் அவநெறியே செல்லாமல் தடுத்தாண்டாய். அடியேற்குத் தவநெறி தந்தருள்” என்று துறையூர் இறைவனைப் பாடித் துதிக்கின்றார். துதித்துத் தவநெறிபெற்ற சுந்தரர் காடு மலை குகைகளில் தனித்திருந்து வாழ்ந்திலர்; அரச மாளிகைகளில் வாழ்ந்தார். “இறைகளோடு இசைந்த இன்பம் இன்பத்தோடு இசைந்த வாழ்வு” அவருக்கு

வாய்த்திருந்தது. பரவையார் சங்கிலியார் என்னும் இரு மனைவியரை மணம் புணர்ந்து கூடியிருந்தார். வனப் பகை சிங்கடி என்னும் இருவரைத் தமது அருமை மகளி ராக ஏற்றுக்கொண்டருளி மகிழ்ந்தார். திருமணக் கோலப் பெருமாள் என விளங்கி, ஐம்புல இன்பங்களும் ஆரத்துய்த்தார். கத்தூரி கமழ்சாந்து பூசி மகிழ்ந்தார் கறிவிரவு நெய்சோறு முப்போதும் வேண்டினார்.

"பண்டுநிகழ் பான்மையினால் பசுபதிதன் அருளாலே
வண்டமர்பூங் குழலாரை மணம்புணர்ந்த வன்தொண்டர்
புண்டரிகத் தவள்வனப்பைப் புறங்கண்ட தூநலத்தைக்
கண்டுகேட் டுண்டுயிர்த்துற் றமர்ந்திருந்தார் காதலினால்"

எனச் சேக்கிழார் பெருமான் சிறந்தெடுத்துப் பாடியிருத் தலும் இச்செய்தியினை வலியுறுத்தும். இவ்வாற்றால் சுந்தரர் தவநெறிக்குப் புதிய விளக்கம் தந்தருளிய சான் றோராதல் உணரலாம்.

'தவம்' என்னும் சொல், தபு என்னும் வினைச்சொல் லின் அடியாகவும், தவ என்னும் உரிச்சொல்லின் அடி யாகவும் தோன்றியது எனக் கொள்ளலாம். முறையே அவற்றிற்குத் 'கெடுதல்' 'மிகுதல்' என்னும் பொருள்கள் உரியனவாகும். 'நம்மிடம் உள்ள காம வெகுளி மயக்கம் முதலிய தீய குற்றங்கள் கெட்டொழிய, அன்பும் அறிவும் அருளும் போன்ற நற்பண்புகள் வளர்ந்தோங்கப் பெரி தும் முயன்று வாழும் முறையே தவநெறியாகும்.' என் னும் அரும்பெறல் உண்மையினைத் 'தவம்' என்னும்சொற் பொருட் குறிப்பால் நாம் இனிது துணியலாம்.

"குற்றங் குறையக் குணம்மேலிட, அருளை
உற்றவரே ஆவிக் குறவாம் பராபரமே"

என இதனைத் தாயுமானவர் தாமும் அருளிச் செய்திருத் தல் ஈண்டுணரத் தகும்.

இங்ஙனம் நாம் தவநெறிக்குப் புதிய விளக்கம் கொண்டு புரிந்துகொள்ளும் முறையில், 'பெற்ற சிற் றின்பமே பேரின்பமாய் அங்கு முற்ற வரும் பரிசில்', மங்கையரோடு இருந்தே யோகு செய்யும் மாண்புடைய வராக விளங்கி வாழ்ந்து காட்டியருளிய சுந்தரர் 'தமிழ்ச் சமர்த்தர்' என்பதில் தடையும் உண்டோ? (தொடரும்)

# திருமழபாடி

சைவநெறிக் காவலர் டாக்டர் மா. இராசமாணிக்கனார்.

**திருமழபாடி.** பாடல் பெற்ற சிவத்தலங்களுள் ஒன்று. இத்தலம திருவையாற்றுக்கு மேற்கில் ஒரு கல் தொலைவிலுள்ள திருநெய்த்தானத்துக்கு இரண்டு கல் தொலைவு வடக்கில் உள்ளது. திருமழபாடிக்கும் இதற்கும் இடையில் கொள்ளிடம் பாய்கின்றது. திருநாவுக்கரசர், திருஞானசம்பந்தர், சுந்தரர் ஆகிய மூவரும் இத்தலத்திலுள்ளசிவபெருமான்மீது திருப்பதிகங்கள் பாடியுள்ளனர். இதனால் இக்கோவில் அப்பர்சம்பந்தர் வாழ்ந்த கி. பி. 7ஆம் நூற்றாண்டில் இருந்தது என்பது தெரிகிறது.

இக்கோவிலில் 103 கல்வெட்டுக்கள் இருக்கின்றன. அவை முதலாம் பராந்தகன் காலம் முதல் கோனேரிதேவ மகாராசர் காலம் வரை (கி. பி. 1492) அரசாண்ட மன்னர்கள் காலத்தவை. எனவே, இக்கோவில் கி. பி. 7 ஆம் நூற்றாண்டு முதல் கி. பி. 15 ஆம் நூற்றாண்டு முடிய மன்னர்களாலும் பொதுமக்களாலும நன்கு போற்றப்பட்டது என்பது விளக்கமாகும். இனி இக்கல்வெட்டுச் செய்திகள் குறிப்பவற்றைக் காண்போம்.

**அரசர்கள்.**

| | | |
|---|---|---|
| பராந்தகன் | I | கி. பி. 907— 953 |
| இராசராசன் | I | கி. பி. 985—1014 |
| இராசேந்திரசோழன் | I | கி. பி. 1012—1044 |
| இராசாதிராசன் | I | கி. பி. 1018—1054 |
| குலோத்துங்கன் | I | கி. பி. 1070—1120 |
| மாறவர்மன் பராக்கிரம பாண்டியன் | | (குலோத்துங்கன் காலம்) |
| குலோத்துங்கன் | II | கி. பி. 1133—1150 |
| இராசராசன் | II | கி. பி. 1146—1173 |
| இராசாதிராசன் | II | கி. பி. 1163—1179 |
| குலோத்துங்கன் | III | கி. பி. 1178—1218 |
| இராசராசன் | III | கி. பி. 1216—1246 |
| சடையவர்மன் சுந்தர பாண்டியன் | | கி. பி. 1251—1271 |

| | |
|---|---|
| சடையவர்மன் வீர பாண்டியன் | கி. பி. 1253—1268 |
| மாறவர்மன் குலசேகரன் | கி. பி. 1268—1311 |
| வீரப்பிரதாப தேவராயர் | கி. பி. 1432— |
| கோனேரி மகாதேவராயர் | கி. பி. 1487—1492 |

**விளக்கு அறம்.**

கோவில்களில் விளக்கெரித்தல் பண்டைக் காலத்தில் சிறந்த அறமாகக் காணப்பட்டது. அதனால் ஒவ்வொரு கோவில் கல்வெட்டுக்களிலும் விளக்கு அறம்பற்றிய கல்வெட்டுக்களே மிகுதியாக உள்ளன. கோவிலில் சாதாரண விளக்கு, சந்திவிளக்கு, நந்தா விளக்கு எனப் பல விளக்குகள் எரிக்க அறம் செய்யப்பட்டன. அடியார்கள் விளக்கைஎரிக்க ஆடுகள், பசுக்கள், எருமைகள், நிலம், பணம், இவற்றைத் தானமாக வழங்குதல் வழக்கம். திருமழபாடிக் கோவிலுக்குக் கால்நடைகளுள் ஆடுகள் மட்டுமே விடப்பட்டன என்பது இங்கு அறியத்தகும். மழபாடிப்பகுதியில் அக்காலத்தில் ஆடுகள் மிகுந்திருந்தன போலும்! ஒரு நந்தா விளக்கு எரிக்க 90 ஆடுகள் அளிக்கப்பட்டன. இங்ஙனம் கோவிலுக்கு விடப்படும் ஆடுகளைக் 'கோவில் விளக்குக் குடிமக்கள்' என்னும் மன்றாடிகள் ஏற்றுக்கொண்டு, ஒப்பந்தத்தில் குறிக்கப் பெற்ற அளவு நெய்யை நாள்தோறும் கோவிலுக்கு அளத்தல் வழக்கமாகும். ஓர் ஆட்டின் விலை 48 காசு என்று ஒரு கல்வெட்டுக் கூறுகிறது.

ஆடுகள் மேலும் மேலும் பல்கிப் பெருக ஆண் ஆடுகளும் உடன் தரப்படுதல் வழக்கம். அங்ஙனம் தரப்படும் ஆடுகள் எண்ணிக்கையில குறைந்துவிடின், கோவிலாரோ பிறரோ புதிய ஆடுகளை வழங்குதல் வழக்கம்.

முதல் இராசேந்திர சோழன் காலத்திலும் முதற் குலோத்துங்கன் காலத்திலும் கோவிலுக்கு விடப்பட்ட ஆடுகள் எக்காரணத்தாலோ இறந்துவிட்டன. அதனால் இரண்டாம் இராசாதிராசன் காலத்தில் புதிய ஆடுகள் கோவிலுக்கு விடப்பட்டன என்று ஒரு கல்வெட்டுக் கூறுகின்றது.

## நில அறம்.

சமயத்தொடர்பான பலவற்றைக் கருதிக் கோவிலுக்கு நிலங்கள் விடப்பட்டன. பலர் தம் கால்களைக் கழுவாமலே நேரே கோவிலுக்குச் செல்கின்றனர். சிலர் திருக்குளத்தில் கால்களைக் கழுவிக்கொண்டு செல்வர். கோவிலுக்கு வருபவர் அனைவரும் கால் கழுவிக்கொண்டே கோவிலுள் நுழையவேண்டும் என்று வணிகன் ஒருவன் நினைத்தான். அவன் மலைமண்டிலத்து ஏருண்புரம் என்ற ஊரினன். அவன் மூன்றும் திருச்சுற்றின் தென்வாயிலில் ஒரு கிணற்றைத் தோண்டினான்; அதன் அருகில் ஒரு தண்ணீர்த் தொட்டியை அமைத்தான்; வேலையாள் ஒருவனை அங்கு நிறுத்தினான்; கோவிலுள் வருபவர்க்குத் தண்ணீர் எடுத்துத் தருகல் அவ்வேலையாள் கடமை. அவ்வணிகன் இத்திருப்பணிக்காக வரியிலியாக ஒரு குழிப்பிட்ட நிலத்தைக் கோவிலுக்கு வழங்கினான். கோனேரி மகாராயர் கோவில் நடன மகளுக்கு ஒரு நிலத்தை வழங்கினார்.

திருமழபாடிச் சிவன் கோவிலில் நாயன்மார் திருஉருவங்களும், பிட்சாடனதேவர், பாவனுபதி நாச்சியார், வைத்தியநாத தேவர், கொள்கைத்தேவர், அழகிய பிள்ளையார், சயங்கொண்ட சோழவிடங்கர், அவருடைய நாச்சியார் திருவுருவங்களும் பூசிக்கப்பட்டன. அடியார் பலர் இத்திருவுருவங்களுக்குப் பூசை நடத்த நிலங்களைக் கொடுத்தனர். திருப்பள்ளியெழுச்சியின் போது பூசை நடத்தவும், நந்தவனம் வைத்து நடத்தவும், விழாக்கள் நடத்தவும், சோலையை உண்டாக்கி வளப்படுத்தவும் நிலங்கள் தானமாக விடப்பட்டன.

நிலதானம் பற்றிப் பேசும் கல்வெட்டுக்களுள் பல, சிவலிங்கத்தின் திருமுழுக்குக்காகக் காவிரியிலிருந்து நாள் தோறும் ஒருகுடம் தண்ணீர் கொண்டுவருபவனுக்கு இன்ன அளவுள்ள நிலம் தானமாகக் கொடுக்கப்பட்டது என்று குறிக்கின்றன. அவை பல அரசர் காலங்களில் தோன்றியவை; இரண்டுகுடம் நீர்கொண்டு வருபவனுக்கு இவ்வளவு நிலம் தானம் என்றும் கூறுகின்றன. இங்ஙனம்

காவிரிநீரை நாளும் கொண்டுவருவதற்காக நிலம் கொடுக்க இத்துணைக் கல்வெட்டுக்கள் வேறு எக்கோவிலிலும் தோன்றவில்லை என்பது கவனிப்பதற்குரியது.

## பிற அறங்கள்

நக்கன் தில்லை அழகியார் என்ற சோழமாதேவியார் வெற்றிலைத்தட்டு ஒன்றை வழங்கினார். இவ்வாறே வெள்ளி வெற்றிலைத்தட்டு, அன்னக்கெண்டி என்ற பித்தளைப்பாத்திரம், சேகண்டி, விளக்குத்தண்டு, காளம், கண்ணாடி, ஊதுசங்கு, ஊதுகொம்புகள், விளக்குத் தண்டு, பல்வேறு பாத்திரங்கள், வெள்ளிக்கவசம் முதலிய பொருள்கள் பலரால் வழங்கப்பட்டன. இறைவனுக்குப் பொன் வாளும், பொற்பூக்களும் கொடுக்கப்பட்டன. கோவிலில் உணவு விடுதி இருந்தது. அதில் நாள் தோறும் சிவயோகிகள், மாகேசுவரர், தபஸ்விகள் ஆகியோரை உண்பிக்க நிலமும் பொன்னும் நெல்லும் வழங்கப்பட்டன. குற்றார் உடையான் மூவேந்தவேளான் போன்ற அதிகாரிகள் புதிய மண்டபங்களைக் கட்டினர்; கோவிலை விரிவாக்கினர். கோவிலைப் பழுதுபார்க்க நெல்லும் நிலமும் வழங்கப்பட்டன. கோவிலில் மார்கழி ஆருத்ரா, மாசிசஷ்டி, ஆனி அஷ்டமி நாள்போன்ற நாட்கள் சிறப்பாகக் கொண்டாடப்பட்டன.

## கோவில் ஆட்சி.

கோவில் அருச்சகரான சிவாச்சாரியரே சில சமயங்களில் அடியார்கள் சார்பில் விளக்குகள் எரிக்க ஒப்புக்கொண்டனர். மூன்றும் குலோத்துங்கன் காலத்தில் கோவில் அருச்சகனை கண்டாதித்தபட்டன் விளக்கு எரிக்கும் பணியை ஏற்றுக்கொண்டான். இரண்டாம குலோத்துங்கன், சந்திர பூஷணபட்டன் என்பவனைக் கோவில் அருச்சகனாக நியமித்தான் என்று ஒருகல்வெட்டுக் கூறுகின்றது.

## சுவாமி பெயர்கள்.

திருமழபாடி உடையார், திருமழபாடி ஆள்வார், திருமழபாடிப் பெருமானடிகள், திருமழபாடி மகாதேவர்

என்பன சுவாமியின் பெயர்கள். அம்மன் பெயர்கள் கல்வெட்டுக்களில் இல்லை. பலகோவில்களில் அம்மனுக்கென்று தனிக்கோவில் கி. பி. 11 ஆம் நூற்றாண்டிலிருந்தே தோன்றியது என்பதைக் கல்வெட்டுக்கள் உணர்த்து கின்றன.

## சிறப்புச் செய்திகள்

இரண்டாம் இராசராசன் காலத்தில், **சேக்கிழான்** மாதேவடிகள் இராமதேவன் ஆன உத்தமசோழப் பல்லவ ராயர் என்ற ஒருவர், ஒரு நந்தாவிளக்கு எரிக்கத் தொண்ணூறு ஆடுகள் கொடுத்தார். இப்பெரியாரே பெரிய புராணத்தை இயற்றிய குன்றத்தூர்ச்சேக்கிழாராக இருத்தல் கூடும், என்று ஆராய்ச்சியாளர் கருதுகின்றனர். சேக்கிழார் இரண்டாம் இராசராசன் தந்தையான இரண்டாம் குலோத்துங்கன் ஆட்சியில் முதலமைச்சர் வேலைபார்த்தவர். அவர் பெரியபுராணம் பாடிய பின்பு துறவுபூண்டு தலயாத்திரை செய்திருக்கலாம்; அப்பொழுது திருமழபாடிக் கோவிலுக்கு ஆடுகளை வழங்கிஇருக்கலாம்.

இக்கோவிலில் தெலுங்குக் கல்வெட்டு ஒன்று காணப் படுகின்றது. ஏழைகளுக்கும் புலவர்களுக்கும் கொடை வழங்கிய கோபய்ய திப்பன் என்பவர்மீது பாடப்பெற்ற புகழ்ப்பாடல் இக்கல்வெட்டில் காணப்படுகின்றது.

சோழர், பாண்டியர் ஆட்சிக்குப் பின்பு விசயநகர் ஆட்சிக்காலத்தில் இக்கோவில், அவ்வாட்சி அதிகாரிகளால் நன்கு கவனிக்கப்பட்டது. காஞ்சிப்புரவராதீசுவரன் மகா மண்டலேசுவரன் இராய பசவசங்கரன் மகனால் ஒருமண்டபம் கோவிலில் கட்டப்பட்டது. கோனேரி தேவமகாராயர் கோவில் நிலங்கள்மீது வசூலித்த வரிகளை மகாபூசைக்கும் கோவிலைப் பழுதுபார்க்கவும் செலவிடும்படி கட்டளை பிறப்பித்தார்.

பொன்னூர்மேனி விளாகம் என்பது கண்டாதித்த சதுர்வேதி மங்கலத்தைச் சேர்ந்த ஒரு சிற்றூர். இது போன்ற பல சிற்றூர்கள் அச்சதுர்வேதி மங்கலத்தைச் சார்ந்திருந்தன என்பது கல்வெட்டுக்களால் தெரிகின்றது.

"பொன்னார் மேனியனே புலித்தோலை அரைக்கசைத்து" என்பது சுந்தரர் தேவாரம். இத்தொடரில் உள்ள "பொன்னார்மேனி" என்பது ஓர் ஊருக்கு இட்டு வழங்கப்பட்டது என்பது இங்கு அறியத்தகும். இது, அக்காலச் சைவ நன் மக்கள், நாயன்மாருடைய அருட்பாடல்கள் மீது கொண்டிருந்த மதிப்பை நன்கு விளக்குவதாகும்.

மலைமண்டலத்து **ஏறுண்புரம்** என்பது ஓர் ஊர். 'ஏறுண்முல்லை' என்பது தொல்காப்பியம். ஆண்மைமிகுந்த வீரக்குடியின் ஒழுகலாற்றைப் புகழும் புறத்துறை, ஏறுண் முல்லை என்பது. இத்துறையின் பெயர் ஓர் ஊரின் பெயராக வழங்கப் பெற்றது பாராட்டத்தக்க தன்றோ!

**ஆண்டார்** என்பவர் சுவாமி பூசைக்குஉரிய மலர்களைப் பறித்தல், கோவில் திருச்சுற்றுக்களைத் தூய்மைசெய்தல் முதலிய சிவப்பணிகளில் ஈடுபட்டவர். இவர்கள் ஏறத்தாழக் கத்தோலிக்க கிறித்தவத் துறவியருள் 'சகோதரர்' என்பவருக்கு இணையாவர். இத்தகைய ஆண்டார் பலர் ஒவ்வொரு பெரிய கோவிலிலும் இருந்து சிவப்பணி செய்து வந்தனர்.

முதலாம் இராசேந்திர சோழன் திருமகளார் **அருள் மொழி மங்கையார்** என்பவர். இப்பெயர் காலப்போக்கில் மருவி 'அம்மங்கையார்' என்றும் 'அம்மங்காதேவி' என்றும் மாறிவிட்டது. இவ்வம்மையாரே கீழைச்சாளுக்கிய மன்னனை இராசராச நரேந்திரனுடைய மனைவியார்.

**ஏனாதி** என்பது படைத்தலைவர் பெற்றுவந்த சங்க காலப் பட்டமாகும். அப்பட்டம் பிற்காலச் சோழர் வரையில் தொடர்ந்து வழங்கில் இருந்து வந்தது என்பது, 'ஆர்க்காடு தலைவன் ஆபிரவன் ஏனாதி' என்னும் கல்வெட்டுத் தொடரால் அறியக்கிடக்கின்றது.

பெரிய ஊர்களைக் காவல் காக்கும் பொறுப்புள்ள வீரர்கள் அக்கால அரசரால் நியமனம் பெற்றிருந்தனர். அவருள் ஒருவன் திருமழபாடி காவல்காணி உடையான். அவன் 'பாரம் தாங்கினான் என்ற அமரர்கோன்' எனக் கல்வெட்டுக் கூறுகின்றது.

போரில் புகழ்மாலை 'மாராயம்' எனப்படும். அதனைப் பெறுபவன் 'மாராயன்' எனப்பட்டான். அவன் மனைவி 'மாராசி' என்று அழைக்கப்பட்டாள். அவன் சோழனுடைய மாராயன் ஆயின், 'வளவன் மாராயன்' எனப்படுவான். இங்ஙனம் பட்டம் பெற்ற அதிகாரி ஒருவன், முதல் இராசேந்திர சோழன் காலத்தில் இருந்தான். அவன் 'பெருந்தரம் தண்ட நாயகன் கூட்டன் ஜனநாதன் என்ற வளவன் மாராயன்' என்று பெயர் பெற்றான்.

சோழரின் இறுதிக்காலத்தில் சிறப்புற்று விளங்கிய ஹொய்சள மன்னர்களும், அவர் தம் தண்ட நாயகர்களும் இக்கோவிலுக்குப் பல அறங்களைச் செய்துள்ளனர்.

மழபாடி என்பது மழநாட்டைச் சார்ந்தது. அந்நாட்டு மக்கள் சங்ககாலம் முதலே மழவர் எனப்பட்டனர். அதனை ஆண்டவர் மழவராயர் என்று பெயர் பெற்றனர். மாறவர்மன் குலசேகர பாண்டியன் காலத்தில் சுந்தரபாண்டிய மழவராயன் என்ற அதிகாரி ஒருவன் இருந்தான் என்பதை ஒரு கல்வெட்டுத் தெரிவிக்கின்றது.

'பொய்கை நாட்டில் மீப்பிலாறு என்னும் உட்பகுதியைச் சேர்ந்த திருமழபாடி' என்பது கல்வெட்டுவாசகம். சோழர் காலத்தில் திருமழபாடிக்கு ஜீன சிந்தாமணி நல்லூர் என்ற ஒரு பெயரும் இருந்தது.

**மக்கள் பெயர்கள்.**

நக்கன் சிங்கதேவன், காமன் தாயன், நஞ்சணிகண்ட பட்டன், பின்பழகியான், இராசசிங்கதேவன், நெற்குப்பை உடையான், ஆராவமுது பெரியநாயன், நாற்பத்தெண்ணாயிர நம்பி, வேளூர்கிழான், இராசராசதேவன், கோவன் சுவரன், மோசி அநந்த நாராயணன் (மோசி கீரனார்—சங்காலப் புலவர்; மோசி என்பது ஊரின் பெயர் அல்லது குடிப் பெயராகலாம்) நானூற்றுவன் யாமாரமன், திருவேங்கட முடையான், சேக்கிழான் இராமதேவன், விளங்க வந்தான் என்ற ஆகில புவன முடையான், கேந்தள வெள்ளாளப் பிள்ளையார் என்பன ஆடவர் பெயர்கள்.

நக்கன் தில்லை அழகியார், அரிஞ்சிகை, இளங்கோன் பிச்சி, பஞ்சவன் மாதேவி, அருள்மொழி மங்கை என்பன பெண்டிர் பெயர்கள்.

# திருவாசகம் - பிஞ்ஞகன்

## திரு. மு. அருணாசலம், எம்.ஏ.,

திருவாசகத்தில் பிஞ்ஞகன் என்ற சொல் நான்கு இடங்களில் வருகிறது. பிஞ்ஞகன் என்பது, தமிழில் சிவபெருமானைக் குறிப்பிடும் சொற்களில் ஒன்று; பிங்கல நிகண்டு இச்சொல்லைக் கூறுகிறது. இச்சொல், திருவாசகத்துள் வரும் சந்தர்ப்பங்களையும், பொருளையும் சிறிது ஆராயலாம்.

பிஞ்ஞகன் என்ற சொல் **பிஞ்சகன்** என்ற வடிவத்தின் திரிபு. திவாகர நிகண்டும், சூடாமணி நிகண்டும் சிவபெருமானைப் பிஞ்சகன் என்றே குறிப்பிடுகின்றன.

"பெற்ற மேல் கொண்ட தம்பிரானடியார்
பிஞ்சகன் தன்னருள் பெறுவார்"

என்று பெரிய புராணமும் பிஞ்சகன் என்றே குறிப்பிடுகின்றன. (திருமலைச் சிறப்பு. பாட்டு 11.) நாவலர் பதிப்பிலும், ஏட்டுப் பிரதிகளிலும் பிஞ்சகன் என்றே இச்சொல் காணப்படுகிறது; சமாஜப் பதிப்புக்களிலும், சுப்பிரமணிய முதலியார் உரைப்பதிப்பிலும் பிஞ்ஞகன் என்று அச்சிடப்பட்டுள்ளது.

**பிஞ்சகன்** (பிஞ்ஞகன்) என்ற சொல் வடமொழியின் திரிபு. இதற்கு வடமொழியில் இரண்டு வேர்ச்சொற்கள் உள்ளன. ஒன்று பிச்ச என்பது. இதுவே பிச்சம் என்று தமிழில் மருவிவந்து, மயில் தோகை முதலான பொருள்களைப் பெற்றது. இதனடியாக வந்த பிஞ்ஞகன் என்ற சொல்லின் பொருளாவது, தலைக்கோல முடையவன் என்பது. தலைக்கோலமாவது, மகளிர் தலையில் அணியும் அணிவகைகளில் ஒன்று. இது சிவபெருமானைக் குறிப்பிடும் போது, பிறைச் சந்திரன், கங்கை, பாம்பு, சடாமுடி ஆகியவற்றைப் பெருமான் தலையில் அணிந்துள்ளமையால், தலைக்கோலம் பெருமானுக்கும் பொருந்துவதாகிறது. எனவே, தலைக்கோலமுடைய சிவபெருமான் பிஞ்ஞகன்.

சம்பந்தர் தேவாரத்துள் பிஞ்ஞகன் என்ற சொல்வரும் இரண்டு இடங்களைக் கருதுதல் தகும்.:

" கண்ணுதலான் வெண்ணீற்றான் கமழ்சடையான் விடையேறி
பெண்ணிதமாம் உருவத்தான் பிஞ்ஞகன் பேர் பலவுடையான்

என்பது பிரமபுரப் பதிகம். (1. 40. 5.)

" பெண்ணமர்ந்தொரு பாகமாகிய பிஞ்ஞகா பிறைசேர்
நுதலிடைக்
கண்ணமர்ந்தவனே கலந்தார்க் கருள்வாயே. "

என்பது திருப்புறவார் பனங் காட்டூர்ப் பதிகம். இவ்விரண்டு பாடல்களிலும் பிஞ்ஞகன் என்று குறிப்பிடும்போது, சம்பந்தர் பெண் உருவத்தையும் உடன் குறிப்பிடுகின்ரூர். இங்கு தலைக்கோலமுடையவன் என்று பொருள் கொள்வது இயல்பாகவும், மிகவும் பொருத்தமாகவும் உள்ளது.

இனி, அப்பர்சுவாமிகள். செவிலி கூற்ருக வரும் அகத்துறைத் தேவாரமாகிய " வனபவளவாய் திறந்து " என்ற திருக் கழிப்பாலைத் தேவாரம் நான்காம் பாடலில், பிஞ்ஞக வேடத்தைக் குறிப்பிடுகிருர்.

" இரும்பார்ந்த சூலத்த னேந்தி யொர்
வெண் மழுவன் என்கின் ருளால்
சுரும்பார் மலர்க் கொன்றைச் சுண்ண வெண்
ணீற்றவனே என்கின்ருளால்
பெரும் பாலனுகி யொர் பிஞ்ஞக
வேடத்தன் என்கின் ருளால்
கரும் பானல் பூக்குங் கழிப் பாலைச்
சேர்வானைக் கண்டாள் கொல்லோ. "

'பெரும்பாலனுகி ஓர் பிஞ்ஞக வேடத்தன்' என்கின்றமையால், தாருகாவனத்து முனி பத்தினிகளுக்கு முன் அவர்கள் விருப்பங்கொள்ளுமாறு சென்ற இளமைத் திருவுருவத்தையும் குறிப்பிட்டதாக நாம் கொள்ளலாம்.

திருவாசகத்தில் ஓரிடத்தில் இப்பொருள் அமையப் பிஞ்ஞகன் என்ற சொல் வருகின்றது.

பேயனுகிலும் பெருநெறி காட்டாய் பிறைகுலாம் சடைப்
பிஞ்ஞகனேயோ

என்பது செத்திலாப்பத்து, ஏழாம்பாடல். அபயம் என்று வந்த சந்திரனுக்கு இடம் அளித்த நிலையை, 'பிறைகுலாம் சடைப் பிஞ்ஞகன்' என்று குறிப்பிட்டு, 'இவ்வியல்பு பொருந்

திய நீ, யான் பேயனுகிலும், என்னை ஆட்கொண்டு எனக்குப் பெருநெறி காட்டாய்' என்று வேண்டுகிருர் என்பதே முறை. ஒருபதிப்பில், இங்கு, 'பிஞ்ஞகன்-மயிற் பீலியை அணிந்தவன்' எள்று காணப்படும் குறிப்புரை சற்றும் பொருத்த மற்றது, மயிற் பீலிக்குச் சிவபெருமான் சடையில் என்ன இடமோ தெரியவில்லை.

இனி, பிஞ்ஞகன் என்ற சொல்லுக்கு மற்ருேர் ஆதாரமும் உண்டு. வடமொழியில் பிஞ்ஜ் என்ற வேர்ச் சொல்லுக்கு அழித்தல் என்பது பொருள். இதிலிருந்து பிறந்த **பிஞ்ஞகன்** என்ற பெயர்ச்சொல் அழிப்பவன், சங்கரிப்பவன் என்று பொருளுடையது. இச்சொல் தமிழில் **பிஞ்ஞகன்** என்ருகி, சங்காரக் கடவுளாகிய ருத்திரன்-சிவபெருமானைக் குறிப்பதாகிறது. இந்தப் பொருளில் இச்சொல் வரும் இடங்கள் மூன்று திருவாசகத்துள் காணப்படுகின்றன.

முதலாவது **சிவபுராணம்** :

**வேகங்கெடுத்தாண்ட வேந்தனடி வெல்க, பிறப்பறுக்கும் பிஞ்ஞகன் தன் பெய்கழல்கள் வெல்க, புறத்தார்க்குச் சேயோன்தன் பூங்கழல்கள் வெல்க**

என்ற இடத்தில், 'பிறப்பறுக்கும் பிஞ்ஞகன்' என்றமையால், பிஞ்ஞகன் சடைமுடியுடையவன் என்றல்லாது, சங்கரிப்பவன் ஆகிய சிவன் என்று கொள்ளுவது நேரிதாகும். **பிடித்த பத்தில்,**

**" பிறவி வேர் அறுத்தென் குடிமுழு தாண்ட பிஞ்ஞகா பெரிய எம்பொருளே "**

என்ற இடத்தில், பிஞ்ஞகன் என்பது, அங்ஙனமே 'பிறவி வேர்-அறுக்கின்ற சங்காரமூர்த்தி' என்ற பொருளுடையது.

மற்ருேரிடம், **திருவம்மானை** *19* ஆம் பாடல் :

**" முன்னனை மூவர்க்கு முற்றுமாய் முற்றுக்கும் பின்னனைப் பிஞ்ஞகனைப் பேணு பெருந்துறையின் மன்னனை "**

என்று வருவது காண்க, இறைவன் 'யாவர்க்கும் முன்னவன், மூவர்க்கும் முடிவாக வுள்ளவன், அனைத்துக்கும் பின்னவன், பிஞ்ஞகன்' என்று உள்ளது. அனைத்துக்கும் பின்னவன் என்பது, யாவும் அழிய இவன்யாவுக்கும் அந்த

மாகவும், எல்லாவுயிர்க்கும் ஈருகவும் உள்ளவன் என்று பொருள்படும். யாவுக்கும் இவன் ஈறுதருபவன் ஆதலால் சங்கரிப்பவன் எனவே, பிஞ்ஞகன் என்ற சொல்லுக்கு இங்கு சங்கரிப்பவன் ஆகிய பெருமான் என்று பொருள் கொள்வது தான் சிறந்தது.

திருவாசக உரைசெய்த கா. சுப்பிரமணிய பிள்ளை அவர்கள் தலைக்கோல முடையவன் என்று பொருள் கூற, பின் உரைசெய்தார் அனைவரும் அப்பொருளையே கொண்டார்கள்.

சுந்தரமாணிக்க யோகீசுரர் என்பவர் பிஞ்ஞகன் என்பதை, பிஞ்சு + அகன் = பிஞ்சகன் என்று பிரித்து, பிஞ் சாகிய அணுவினுள்ளே அமர்ந்திருப்பவன் என்று பொருள் கொண்டார். இவ்வகைப் பொருள்கள்யாவும் ஆதார மற்றவை, சிறப்பற்றவை என்பது மேற்கூறிய குறிப்புக் களால் தெளிவாகும்.

எனவே, பிஞ்ஞகன் என்ற சொல்லை மாணிக்கவாசகர், எடுத்தாளும் போது, சந்தர்ப்பம் நோக்கி, அச்சொல், பிறை நதி அரவு சடை ஆகிய தலைக்கோலமுடைய பெருமான் என்றும், சங்கரிப்பவனுகிய பெருமான் என்றும் இருவேறு பொருள் தந்து நிற்பது தெளிவாகும்.

---

திருமணம்: சமாஜப் பேரன்பர் நாகர்கோவில் திரு, C. வள்ளிநாயகன் பிள்ளை, B. A, B. L. அவர்களின் மூத்த மகன் திரு. வ. சிதம்பரம் அவர்களுக்கும், தாழக்குடி சிவானந்த பத்மநாபப் பிள்ளையின் மகள் திரு. தங்கம் அம்மைக்கும் 7-5-62 அன்று திங்கட்கிழமை, தாழக்குடி மணமகள் இல்லத்தில் திருமணம் சிறப்புற நிகழ்ந்தது, மணமக்கள் நீடினிது வாழச் சிவபிரான் திருவருளை வழுத்து கின்ருேம்.

---

# சங்க நூல்களில் சமயம்

திரு. அ. கி. பரந்தாமனார், M.A.,
தியாகராசர் கல்லூரி, மதுரை.

(சென்ற ஏப்ரல் மாதம் 108-ம் பக்கத் தொடர்ச்சி)

புறநானூறு 161 ஆம் பாடலில் பூஞ்சாற்றூர்ப் பார்ப்பான் கௌணியன் விண்ணந்தாயன் செய்த வேள்வியைச் சிறப்பித்துப் பாடிய ஆவூர் மூலங்கிழார், வேள்வி செய்த முறையினை விரிவாகக் கூறியுள்ளார்; அவன் தன் மனைவியரோடு கூடி மான் தோலை அணிந்து வேள்வியில் நீர் நாணும்படி நெய் சொரிந்ததையும், வேள்வி முடிவில் பெரு விருந்து செய்ததையும் குறிப்பிட்டிருக்கிறார்; அவன் செய்த வேள்விகள் எண்ணில் அடங்கா என்றும் கூறி வாழ்த்தியுள்ளார். கரிகாற் பெருவளத்தானும் வேள்வி செய்ததைக் காண்கிறோம். பெருஞ் சேரல் இரும்பொறையும் வேள்வி செய்ததைப் பதிற்றுப்பத்துக் கூறுகிறது. இப்படி தமிழ் வேந்தர்களும் பார்ப்பனரும் வைதிக நெறியில் நின்று வேள்வி செய்து வழிபட்ட முறை மிகவும் பரவியிருந்ததைச் சங்க நூல்கள் குறிப்பிடுவதைக் காணும்போது, வேதநெறி அக்காலத்தில் வேரூன்றி விட்டது என்று ஐயமின்றிக் கூறலாம்.

அடுத்துப் பெரிதும் மக்களிடத்தில் பரவியிருந்த சமயம் முருக வழிபாட்டுக்குரிய கௌமார சமயமாகும். குமரன் வழிபாட்டைக் கௌமார சமயம் என்று குறிப்பிட்டது பிற்காலமாகும். இப்பெயரில் சொல்லாவிட்டாலும் முருக வழிபாடே மிகப் பெரிய அளவில் அக்காலத்தில் பரவியிருந்தது; இதுதான் சங்க காலச் சமயம் என்று சொல்லும் அளவிற்குக் காட்சியளிக்கிறது. குறிஞ்சி நில மக்கள் மட்டுமல்லாமல் வேறு நில மக்களும் முருகனை வழிபட்டு வந்தார்கள். முருகப் பெருமானுக்கு வெறியாட்டு விழாக்களும் நடைபெற்றன. பரிபாடலில் பெரும் பெயர் முருகன் மீது 8 அருமையான துதிப்பாடல்கள் உள்ளன. 5வது பரிபாடல் "பிணிமுகம் என்னும் யானையின் மீது எழுந்தருளி வேலால் சூரபன்மனாகிய மாமரத்தைத் தடிந்து, கிரௌஞ்ச மலையை ஊடறுத்தோய்! ஆறு திருமுடியையுடையோய்" என்றும், 8 வது பாடல், "முரு

க்ப்பெருமானே! துழாய் மாலையையும் கருடக் கொடியை யும் உடைய திருமால், சிவபெருமான், பிரமன், துவாத சாதித்தியர், தேவர்கள், அரசர்கள், தெய்வ முனிவர்கள் முதலியோரும் நின்னைத் தரிசிக்கும் பொருட்டு இம்மண் ணுலகில் வந்து உறைவதற்குரிய இடமாயிற்று திருப்பரங் குன்றம், அதனால் அஃது இமயமலையை ஒக்கும்" என்றும், 9வது பாடல், "கங்காதரராகிய நீலகண்டப் பெருமா னுக்கு மகனாகப் பிறந்தோய்" என்றும், 14வது பாடல் "ஆறு திருமுகங்களையும் பன்னிரு தோளையும் கொண்டு வள்ளி என்னும் மகளை விரும்பியோய்;" என்றும் 17 வது பாடல், "மணிநிறமயிலையும் உயர்ந்த கோழிக் கொடியை யும் உடைய முருகா! பிணிமுகம் என்னும் யானையின் மேல் ஊர்ந்து போர் செய்து வெல்லும் தலைவா! பிறவித் துன்பம் நீங்கிய இன்பம் மலிந்த நாட்களை யாம் பெறுக என்று வேண்டி யாமும் எம்சுற்றத்தாரும் மக்களைப் பணிந்தொழு காமல் நின்புகழைப் பாடித் தொழுகின்றோம்" என்றும், 18வது பாடல் "சூரபன்மாவாகிய மாமரத்தை அழித் தோய், நீ விரும்புதலால் இத் திருப்பரங்குன்றம் நின்னைப் பெற்ற இமயமலையைப் போலப் புகழ் பெற்றது" என் றும், 19 வது பாடல், "திருப்பரங்குன்றத்தில் நீ வள்ளி நாச்சியாரை மணம்புரிந்தருளியது வானுலகத்தில் தேவ யானையை மணந்ததற்கு மாறாக இவ்வுலகத்திற் செய்த செயல் போலும்" என்றும், 21 வது பாடல், "பகைவரை அழித்த செல்வா, சுற்றத்தோடு ஒருங்கே நின்னடிக்கண் உறைதல் இன்றுபோல என்றும் நமக்கு இயைவதாக எனப் பரவுகின்றோம்" என்றும் முருகப் பெருமானைப் புகழ்ந்து போற்றுவதைக் காண்கிறோம்.

திருமுருகனைப் புகழ்ந்து பாடும் ஒருமுழு நூலே திருமுருகாற்றுப்படை என்னும் பெயருடன் பத்துப் பாட்டுத்தொகுதியில் கடவுள் வாழ்த்துப் போல் முதலில் இருக்குமாறு தொகுக்கப்பட்டிருக்கின்றது. அப்பாடல் "பழமுதிர்சோலை மலைகிழவோனாகிய வாணுதல் கணவன், முருகன் திருப்பரங்குன்றில் அமைந்துறைதலும் உரியன்; திருச்சீரலைவாயிலும் இருப்பன்; திருவாவினன் குடியில் அசைதலும் உரியன்; ஏரகத்தில் உறைதலும் உரியன்; குன்றுதோறாடலும் உரியன்; என்று முருகனுக்குரிய

ஐந்து திருப்பதிகளையும் குறிப்பிட்டுப் போற்றுகிறது. பிற்காலத்தார் குன்று தோருடலையும் சேர்த்து முருகனுக்கு ஆறுபடைவீடுகளாகத் தவறுபடக்கருதலாயினர்.

திருமுருகாற்றுப்படைக்கு முற்பட்டனவாகக் கருதப்படுகின்ற எட்டுத்தொகை நூல்களிலும், முருகப்பெருமானும் திருச்செந்தூரும், முருகன் பொருட்டு வெறியாடலும், முருகன் மக்கள்மேல் ஆவேசமாதலும் குறிப்பிடப்பட்டுள்ளன. புறநானூற்றிலுள்ள 16வது பாடல், "முருகற்சீற்றத்து உருகெழு குரிசில்" என்னும், 23 வது செய்யுள், "கார்நறுங்கடம்பின் பாசிலைத் தெரியற் சூர்நவை முருகன்" என்றும், 54 வது பாடல், "செந்தில் நெடுவேள் நிலைஇய" என்றும், 299வது செய்யுள், "அணங்குடை முருகன் கோட்டத்து" என்றும் குறிப்பிடுகின்றன. 299வது பாடல் முருகன் கோட்டத்தைக் குறிப்பிடக்காண்கிறோம். இவ்வாறு முருகவணக்கம் மலைவாழ்மக்களுக்கு மட்டுமன்றி மற்றையோர்க்கும் பெருமளவில் இருந்தது என்பது சங்கநூல்களால் அறியலாகும்.

அடுத்துத் திருமாலைப்பற்றிய குறிப்புக்கள் சங்க நூல்களில் மிகுதியாகக் காணப்படுகின்றன. தொல்காப்பியத்திலேயே முல்லை நிலக்கடவுளாகத் திருமால், மாயோன் என்னும் பெயரால் குறிப்பிடப்படுகிறார். "மாயோன்மேய காடுறை உலகமும்" என்னும் தொல்காப்பிய நூற்பாவின் அடியால் இவ்வுண்மையை உணரலாகும். தொல்காப்பியத்தில் காணப்படும் பூவைநிலை என்னும் துறை "மாயோன் மேய மன்பெருஞ் சிறப்பின் தாவா விழுப்புகழ் பூவைநிலை" என்று கூறுகிறது. மன்னனைத் திருமாலுக்கு உவமித்துக் கூறுவதே பூவை நிலை எனப்படும். திருக்குறளில் காணும்" "அடியளந்தான்" "தாமரைக்கண்ணான் உலகு" என்னும் தொடர்கள் திருமாலைக் குறிப்பவை. முல்லைப்பாட்டு, "வலம் புரி பொறித்த மாதாங்கு தடக்கை நீர்செல நிமிர்ந்த மாஅல் போல" என்று திருமாலை உவமையாகக் கொண்டே தொடங்குகிறது. பெரும்பாணாற்றுப்படை, "இருநிலம் கடந்த திருமறு மார்பின் முந்நீர் வண்ணன் என்று" குறிப்பிடுவதோடு, திருமாலின் பள்ளி கொளளும் கோலத்தை.

"நீடுநிலைக் காந்தளஞ் சிலம்பிற் களிறுபடிந் தாங்குப்
பாம்பணைப் பள்ளி அமர்ந்தோன்"

என்று வருணிக்கிறது. மதுரைக் காஞ்சி, "மாயோன் மேய ஓணம்" என்கிறது. புறநானூற்றிலுள்ள 56வது பாட்டு "மண்ணுறு திருமணி புரையும் மேனி விண்ணுயர் புட்கொடி விறல் வெய்யோனும்" என்று திருமாலைக் குறிப்பிடுகிறது. சோழன் குராப்பள்ளித் துஞ்சிய பெருந்திருமாவளவனும் பாண்டியன் வெள்ளியம்பலத்துத் துஞ்சிய பெருவழுதியும் ஒருங்கிருந்ததைக் கண்ட காவிரிப் பூம் பட்டினத்துக் காரிக் கண்ணனார்,

"பானிற உருவிற் பனைக்கொடியோனும்
நீனிற உருவின்நேமி யோனும் என்று
இருபெருந் தெய்வமும் உடன் நின்றாங்கு"

என்று பாடி வாழ்த்தியுள்ளார்.

பரிபாடலில் திருமால் துதியாக ஆறுபாடல்கள் உள்ளன. முதற்பரிபாடல், திருமாலையும் பலராமனையும் இணைத்துக் கூறுவதுடன் பிரமனையும் காமனையும் திருமாலுக்குப் புதல்வர்களாகக் குறிப்பிட்டு,

"புலனும் பூவனும் நாற்றமும் நீ
வலனுயர் எழிலுயர் மாக விசும்பும்
நிலனும் நீடிய இமயமும் நீ"

என்று துதி பாடுகிறது. 2வது பரிபாடல், "நீ பலதேவனுக்குப் பிறப்பு முறையால் இளையை; சிறப்பு முறையால் முதியையாகின்றாய்; நீ உயிர்தொறும் மறைந்து நிற்கிறாய்" என்று பாடுகிறது. 3ஆம் பாடல், "மறுபிறப்பறுக்கும் மா அயோயே" என்கிறது. 4வது பாடல் தூணிலிருந்து திருமால் தோன்றி இரணியனுடைய மார்பை வகிர்ந்த கதையைக் குறிப்பிடுகிறது. 13வது பாடல் திருமாலைத் தொழுவோர்க்கு வைகுண்டம் உரியதாவதாகக் கூறுகிறது. 15வது பாடல், "பலமலைகளுள் திருமாலிருஞ்சோலைமலையே சிறந்தது. அம்மலையை வணங்குவோம். திருமால் பலதேவரோடு அமர்ந்திருக்கும் நிலையை மாந்தர்களே தொழுவீர்களாக!" என்று வேண்டுகிறது.

சிலப்பதிகாரமோ திருவேங்கடமலையில் உள்ள திருமாலின் நின்ற திருக்கோலத்தையும், திருவரங்கக்கோயிலில் பெருமாள் பள்ளிகொண்டிருக்கும் கோலத்தையும்

வருணிப்பதோடு,இராமாவதாரத்தையும் கிருஷ்ணாவதாரத்தையும் கூறுகிறது. இவ்வாறு பலராலும் தொழப்பட்ட கடவுளாகச் சங்க நூல்களில் திருமால் காட்சியளிப்பதைக் காண்கிறோம்.

சிவன் என்னும் பெயர் காணப்படாவிடினும், சங்க நூல்களில் சிவ வழிபாடும் சிவனைப்பற்றிய கதைகளும் காணப்படுகின்றன. தொல்காப்பியத்தில் சிவனைப்பற்றி ஒரு குறிப்பும் இல்லை. சிவன் என்னும் பெயர் இல்லையெனினும் சிவனைக்குறிக்கும் தொடர்களும் இல்லை. இது வியப்பாக இருக்கிறது. தொல்காப்பியத்தில் காணப்படும் கந்தழி என்னும் சொல், சிவலிங்கத்தைக் குறிப்பதாகச் சிலர் கருதுகிறவாறு, தீயையோ சிவலிங்கத்தையோ,தத்துவங்கடந்த கடவுளையோ குறிக்குமாறு இல்லை. பண்டைய உரையாசிரியரான இளம்பூரணர்,

"கொடிநிலை கந்தழி வள்ளி என்ற
வடுநீங்கு சிறப்பின் முதலன மூன்றும்
கடவுள் வாழ்த்தொடு கண்ணிய வருமே"

என்னும் தொல்காப்பிய நூற்பாவிற்கு "குற்றம் தீர்ந்த சிறப்பினையுடைய கொடிநிலை முதலாகச் சொல்லப்பட்ட முற்பட்ட மூன்றும் பாட்டுடைத் தலைமகனைச் சார்த்தி வருங்காலத்துக் கடவுள் வாழ்த்தோடு பொருந்தி வரும்" என்று உரை கூறியுள்ளார். ஐயனாரிதனார் தமது புறப்பொருள் வெண்பா மாலையில் கொடி நிலை என்பது மன்னவன் கொடியை முதற்கடவுளர் மூவர் கொடியுள் ஒன்றனோடு உவமித்ததாகும் என்றும், கந்தழி என்பது மாயோன் வாணாசுரனது சோ என்னும் மதிலினை அழித்த வெற்றியினைப் புகழ்வதாகும் என்றும், வள்ளி என்பது மகளிர் முருகனுக்கு வெறிக் கூத்தாடியதைக் குறிக்கும் என்றும் விளக்கியுள்ளார். நச்சினார்க்கினியர் கொடிநிலை என்பது கீழ்த்திசைக்கண்ணே நிலைபெற்றுத் தோன்றும் வெஞ்சுடர் மண்டிலமாகிய ஞாயிறு என்றும், கந்தழி என்பது ஒருபற்றுக்கோடும் இன்றித்தானே நிற்கும் தத்துவம் கடந்த பொருள் என்றும், வள்ளி என்பது, தேவர்க்கு அமிர்தம் வழங்கும் தண்கதிர் மண்டிலமாகிய திங்கள் என்றும் கூறினார். இப்பொருள் பொருத்தமானதன்று. திரு. க. வெள்ளைவாரணனார் தமது தொல்காப்பிய உரைநடை நூலில் நச்சினார்க்கினியர் கூறிய பொருள்

தவறானது என்பதை எடுத்துக் காட்டிமறுத்திருப்பதைக் காண்க. "இம்மூன்றனுள் கந்தழி என்பதற்கு அவர் (நச்சினார்க்கினியர்) கூறும் இலக்கணம் கடவுளுக்கே உரிய சிறப்புடையதாதலால், அது கடவுள் வாழ்த்தாவ தன்றிக் கடவுள் வாழ்த்தோடு பொருந்திவரும் வேறொரு துறையெனக் கொள்வதற்குஇல்லை." ஆதலால் நச்சினார்க் கினியர் கந்தழி என்னும் சொல்லுக்குக் கூறிய பொருள் தவறானது என்றறியலாகும்.

கந்தழிவேறு; கந்து என்பதுவேறு, பட்டினப்பாலை 249வது அடியில் குறிப்பிடும் "வம்பலர் சேக்கும் கந்துடைப் பொதியில்" என்புழி, கந்து என்னும் சொல் சிவ லிங்கத்தைக் குறிக்கலாம், சிவ வழிபாட்டுக்குரியதாகச் சிவ லிங்கத்தை ஒரு குழவி வடிவில் மரத்தடியில் வைத்திருப் பதை இன்றும் காண்கிறோம். சிந்துவெளி நாகரிகம் சிவ லிங்க வழிபாட்டைக் காட்டுவதாகக் கூறினும் நம்முடைய சங்க நூல்களில் சிவலிங்கத்தைப் பற்றிய குறிப்புக்கள் காணோம்.

சிவபெருமான் சங்க நூல்களில் குறிப்பிடப்படுகிறார். புறநானூற்றிலுள்ள 55ஆம் செய்யுள், "ஓங்குமலைப் பெருவிற் பாம்பு ஞாண்கொளீஇ ஒருகணை கொண்டு மூவெயில் உடற்றிப் பெருவிரல் அமரர்க்கு வென்றி தந்த கறைமிடற்று அண்ணல் காமர் சென்னிப் பிறைநுதல் விளங்கும் ஒருகண்போல" என்று சிவபெருமான் முப்புரம் எரித்ததையும் முக்கண்ணுடைமையையும் கறைமிடறு கொண்டிருத்தலையும் கூறுகிறது. புறம் 56வது செய்யுள் "ஏற்றுவலன் உயரிய எரிமருள் அவிர்சடை மாற்றருங் கணிச்சி மணிமிடற்றோன்", என்று சிவபெருமானுடைய சடையையும் சூலத்தையும் மணிமிடற்றையும் வருணிக் கிறது. ஔவையார், "நீலமணி மிடற்று ஒருவன் போல மன்னுக பெரும" என்று அதியமானை வாழ்த்தியுள்ளார். பரிபாடலில் 'கறைமிடற்றண்ணல்' என்றும், 'பைங்கட் பார்ப்பான்' என்றும் வருந்தொடர்கள் சிவபெருமானைக் குறிப்பிடுகின்றன. மலைபடு கடாம் என்னும் பாட்டின் 83 வது அடி, 'காரியுண்டிக் கடவுள்' என்கிறது, 'ஆலமர் கடவுள்' என்றும் சிவபெருமான் குறிப்பிடப்படுகிறார். இங்ஙனம் சங்க நூல்களில் சிவபெருமான் குறிப்பிட்டிருத் தலைக்காண்கிறோம். நெஞ்சையள்ளும் சிலப்பதிகாரம், "பிறவாயாக்கைப் பெரியோன்" என்று குறிப்பிடுகிறது.

மேலும் சங்க நூல்களில் பிரமன், பலதேவன், இந்திரன் இவர்களும் குறிப்பிடப்படுகிருர்கள். கொற்றவை வழிபாடும் சங்க நூல்களில் காணப்படுகிறது. வீரர்களும் மன்னர்களும் வேடுவர்களும் கொற்றவையை வழிபட்டார்கள். வீரத்துக்குக் கொற்றவை தெய்வமாக விளங்கினுள். நற்றிணை 343வது பாடலில் "கடவுள் ஆலத்து" என்றும், அகநானூறு 270 வது செய்யுளில் 'கடவுள் மரத்த' என்றும், புறநானூறு 199வது பாடலில் 'கடவுள்ஆலத்து' என்றும் தொடர்கள் வருவதை நோக்கும் போது, மரத்தை வணங்குவதும் சங்ககாலத்தில் இருந்ததைச் சங்க நூல்களால் அறிகிருேம். இன்றும் தமிழகப்பெண்கள் ஆலமரத்தையும் அரசமரத்தையும் வேப்பமரத்தையும் சுற்றிவருவதைக் காணுமல் இல்லை. திராவிடர்க்கே உரிய பாம்பு வணக்கம் சங்கநூல்களில் காணப்படவில்லை. சிவபெருமான் பாம்பை அணிந்திருத்தலையும் திருமால் பாம்பணையில் பள்ளிகொண்டிருத்தலையும் மட்டும் காண்கிருேம். இருபெருந்தெய்வங்களோடு பாம்பை விட்டுவிட்டார்கள் போலும்.

இறந்த சிறந்த வீரனுக்குக் கல்நட்டுப் பீலி அணிந்து கல்லைப் படைத்துத் தமிழ்மக்கள் வழிபாடு செய்ததுமுண்டு. இது சமாதி வழிபாடு போன்றது. நடுகல் வழிபாட்டையும் புறநானூற்றில் காணலாம். இது தமிழகத்தில் அக்காலத்தில் மிகுதியாக இருந்தது. அகநானூறு 131 ஆம் பாடல் "ஆடவர் பெயரும் பீடும் எழுதி அதர் தொறும் பீலி சூட்டிய புறங்குழிலை நடுகல்" என்றும், மலைபடுகடாம், "செல்லா நல்லிசைப் பெயரொடு நட்ட கல்லேசு கவலை எண்ணு மிகப் பலவே" என்றும் கூறுவதால் இவ்வுண்மை புலனுகிறது. 335வது புறநானூற்றுப்பாடல்,

"கல்லே பரவினல்லது கடவுளும்
நெல்லுகுத்துப் பரவலும் இலவே"

என்று நடுகற்றெய்வத்தைப் புகழ்ந்து கூறுகிறது. நடுகல்லை வணங்காமற்போகாதே என்று 262வது புறநானூற்றுப் பாடலில் இரவலனுக்கு ஒரு புலவர் கூறியிருப்பதைக் கீழ்வரும் அடிகளிற் காணலாம்.

" இரும்பறை இரவல, சேறியாயின்
தொழாதனை கழிதல் ஓம்புமதி

'அந்நடுகல்லை வணங்கினுல் கொடுங்கானம் மழைபெய்தலால் குளிரும்' என்றும் மேற்குறித்த புலவர் கூறியுள்

னார். இவ்வாறு நடுகல் வழிபாடும் சங்க நூல்களில் பரக்கக் காணலாம்.

இன்னும் பரதவர்கள் சுறுமீன் எலும்பை நட்டு அதில் வருணனை நிறுவி (ஆவாகனம் செய்து) வழிபட்டார்கள் என்பதைப் பட்டினப்பாலை கூறுகிறது. சங்க கால இறுதியில் சேரன் செங்குட்டுவன் பத்தினி வழிபாட்டைத் தமிழகத்தில் புகுத்தினான். இதுவும் நடுகல் வழிபாடு போன்றதே. வீரர்களை வணங்கியது போல் வீரபத்தினியையும் வணங்கும் வழக்கம் புகுந்தது. சிலப்பதிகாரம் பத்தினி வழிபாட்டைப் பரப்பும் நோக்கத்தோடே தோன்றிய தென்றால் தவறாகாது. "உரைசால் பத்தினிக்கு உயர்ந்தோர் ஏத்தலும்' என்று சிலப்பதிகாரப்பதிகம் கூறுவது இக்கருத்தை வலியுறுத்தும். சேரன் செங்குட்டுவன் இமயத்திலிருந்து கல்லைக் கொணர்ந்து அதனைக் கங்கையில் நீராட்டிச் சேரநாட்டிற்குக் கொண்டுவந்து படிமம் செய்வித்துக் கோயில் கட்டி அதில் கண்ணகித் தெய்வத்தை நிறுவி வழிபட்டான். மன்னர்களும் அப்பத்தினித் தெய்வத்தை வழிபட்டார்கள்.

காவிரிப்பூம்பட்டினத்தில் பிறவாயாக்கைப் பெரியோன் கோயிலும், அறுமுகச் செவ்வேள் அணிதிகழ் கோயிலும், வால்வளை மேனி வாலியோன் கோயிலும், நீலமேனி நெடியோன் கோயிலும், மாலைவெண்குடை மன்னவன் (இந்திரன்) கோயிலும் இருந்தன. இந்நகரில் இந்திர விழா மிகச் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. மதுரையில் சமணப் பள்ளிகளும் பௌத்தப் பள்ளிகளும் இருந்ததை மதுரைக் காஞ்சி அறிவிக்கிறது கார்த்திகை விழாவும் திருவாதிரை விழாவும் நாடெங்கும் கொண்டாடப்பெற்றன.

இவ்வாறு சங்கநூல்களிலிருந்து தொகுக்கப்பெற்ற குறிப்புக்களை நோக்கும்போது, சங்ககால மக்கள் கடவுள் வேறுபாடின்றிப் பெருநோக்கோடு சமரச உணர்ச்சியுடன் வாழ்ந்துவந்தார்கள் என்னும் உண்மையே புலனாகிறது. மக்கள் சிவபெருமானையும் வழிபட்டனர். முருகப்பெருமானையும் வணங்கினார்கள், பலதேவனையும் தொழுதார்கள்; திருமாலையும் வழுத்தினார்கள்; கொற்றவையையும் பரவினார்கள்; பத்தினித்தெய்வத்தையும் போற்றித்தொழுதார்கள்; நடுகல் தெய்வத்தையும் வழிபட்டு வணங்கினார்கள். வேடர்கள் காடுறை தெய்வங்களையும் கொற்றவையையும் சிறப்பாக வழிபட்டதையும், பரதவர்கள் தங்கள்

நெய்தல் நிலத்துக்குரிய வருணனை வழிபட்டதையும் காண்கிறோம். மன்னர்களும் பார்ப்பனர்களும் சிறப்பாக வேத நெறிநின்று வேள்வி செய்தார்கள். பலரும் இந்திர விழாவில் கலந்துகொண்டனர். வேள்விநெறியை எதிர்த்த சமண பௌத்தமதங்களைக் கற்றவர்கள் எதிர்த்தார்கள் என்ற குறிப்புப் புறநானூற்றில் காணப்படுகிறது. ஆனால், பொதுவாகக் கற்றவர்களும் மற்றவர்களும் பெரும்பாலும் சமயவேற்றுமையோ மதவெறியோ இன்றிச் சமரசப் பெருநோக்கோடு வாழ்க்கையில் நம்பிக்கை கொண்டு இன்பமாக வாழ்ந்தார்கள் என்று சுருங்கக் கூறலாம்.

மதுரைக்கணக்காயனார் மகனார் நக்கீரனார் பூவைநிலை என்னும் புறப்பொருள் துறைக்குத் திருமாலை மட்டும் உவமிக்கும் மரபை விடுத்து, இலவந்திகைப் பள்ளித்துஞ்சிய நன்மாறனைச் சிவபெருமான், பலராமன், திருமால், முருகன் இவர்களோடு ஒப்பிட்டுப் புறநானூற்றில் 53வது பாடலை இயற்றியுள்ளார். முருகப் பெருமானைப் பாடிய கடுவன் இளவெயினனார் திருமாலையும் வேறுபாடின்றிப் பாடியிருக்கக் காண்கிறோம். வடநாட்டுச் செலவில் நிலவுக்கதிர் முடித்த நீளிருஞ் சென்னி உலகு பொதி உருவத்துச் சிவபெருமானை இறைஞ்சி யானைமீது ஏறிய போது, ‘குடக்கோக்குட்டுவன் கொற்றம் கொள்க’ என ஆடகமாடத்து அறிதுயில் அமர்ந்தோனை திருமால் சேடம் கொண்டு சிலர் நின்றேத்தத் தெண்ணீர் கரந்த செஞ்சடைக் கடவுள் வண்ணச் சேவடி தலைமேல் வைத்திருந்ததால், அதனை வாங்கி அணிமணிப்புயத்துத் தாங்கிய செங்குட்டுவனே, பத்தினிக்கடவுளான கண்ணகிக்குக் கோயில் கட்டிநித்திய வழிபாட்டிற்கு ஏற்பாடுசெய்து தொழுதுவந்தான்.

இச்சான்றுகளை நோக்கும்போது சங்ககாலத் தமிழகத்தில் பலகடவுளை வணங்கும் சமயமே இருந்தது என்பதில் எட்டுணையும் ஐயமில்லை. இதுவே சங்கநூல்களில் காணும் சமயமுமாகும். இதுவே இன்று தமிழ்மக்கள் மேற்கொண்டுள்ள சமயமாகும். இன்று விநாயக வழிபாடும் சேர்ந்திருக்கிறது. அன்று விநாயகவழிபாடு தமிழகத்தில் புகவில்லை இது கி. பி. 7ஆம் நூற்றாண்டுக்குப் பின் புகுந்தது. சமரச சமயமே சங்க நூல்களில் காணும் சமயம் என்க.

# இந்திய தத்துவஞானம்: மதிப்புரை

திரு. நல். முருகேச முதலியார், பி.ஏ.

(ஆக்கியோன் கி. லக்ஷ்மணன். எம்.ஏ., பிரசுரம் பழனியப்பா பிரதர்ஸ், சென்னை. விலை ரூ. 6–75)

இந்திய தத்துவங்களைப்பற்றி இராதாகிருஷ்ணன், ஹிரியண்ணா, தாஸ்குப்தா போன்ற தத்துவ நிபுணர்கள், விரிவான பல நூல்களை ஆங்கிலத்தில் எழுதியுள்ளார்கள். ஆனால் நாட்டு மொழிகளிலே, முக்கியமாக நமக்குத் தேவையான தமிழிலே, இதுவரையும் அத்தகைய நூலை யாரும் எழுதவில்லை. இந்தத்தேவையை இலங்கைப் பல்கலைக்கழகத்தில் தத்துவ ஆசிரியராயிருக்கும் திரு. கி. லக்ஷ்மணன் இந்த நூலில் பூர்த்திசெய்துள்ளார். நூலின் தோற்றுவாயில் 'கீழைத் தேசத்தவராகிய நமக்குத் தத்துவஞானம் பரம்பரைச் சொத்து...இதனது இயல்புகளைப்பற்றி நாம் அனைவரும் ஓரளவாவது அறிந்திருப்பது அவசியம்' என்று ஆசிரியர் கூறியுள்ளது மிக உண்மையே. பிறசமயங்களைப் பற்றி சர்வதர்சன சங்கிரகம், சிவஞானசித்தியார் பரபக்கம் முதலிய நூல்களின் மூலம் அறியக்கூடுமாயினும் அது ஒரு கடினமான முயற்சியேயாகும் யேலும் பல சமயங்களுக்குள்ள ஒற்றுமை வேற்றுமைகளைத் தத்துவ ஞான அடிப்படையில் உணர்வதற்கும் மேல்நாட்டுத் தத்துவங்களோடு சிறிது ஒப்பிட்டு நோக்கவும் ஆசிரியர் ஆக்கியுள்ள இந்த உரைநடைநூல் போல எதுவும் அவ்வளவு பயன்படாது. உலகாயதம் முதல் வேதாந்தத்தின் உச்சியில் பழுத்த சைவசித்தாந்தம் வரையிலும் எந்த தத்துவத்தில் சார்புடையவராயிருந்தாலும், ஒருவர் பிறதர்சனங்களோடு ஒப்புநோக்கி ஆராய்ந்தால்தான ஒவ்வொன்றின் சிறப்பும் முரண்பாடுகளும் நன்கு விளங்கும். இத்தகைய அறிவை ஒருசிறிதேனும் அடையப் பலநூல்களை மிக முயன்று படித்துச் சிந்தித்தால்தான் அடையக்கூடும். இந்த முயற்சி தத்துவத்துறையில் ஈடுபாடு இல்லாத மற்றவர்களுக்கு ஒரு கஷ்டமான முயற்சியேயாகும். தத்துவ ஆசிரியர்கள் கூட அத்தகைய பணியில் ஈடுபடுவதில்லை. மேலும் அதைத் தமிழில் எழுதுவது மிகவும் கடினமான ஒரு பணியாகும். இதைப் பாராட்டியே இந்நூலுக்கு முகவுரை தந்துள்ள சென்னைப் பல்கலைக்கழகத்

தத்துவப் பேராசிரியர் டாக்டர் டி. எம். பி. மகாதேவன் அவர்கள் ஆசிரியரைப் பாராட்டி எழுதுகையில், அவர் இந்தியதத்துவத்தைப் பற்றிய நல்ல நூல்களையெல்லாம் விரிவாக ஊன்றிப் படித்துள்ளாரென்றும், வெறும் கோட்பாடுகளை மட்டும் கூருமல், ஒவ்வொன்றையும் ஆய்வு செய்திருக்கிருரென்றும் கூறியுள்ளார். மேலும், இந்நூலின் சிறப்பு சைவசித்தாந்த சந்தாஞ சாரியர்கள் கையாண்ட பரபக்க முறையையும் ஆசிரியர் கையாண்டுள்ளார் என்பதாகும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளது போற்றத்தக்க தாகும்.

இந்நூலில் உலகாயதம், சமணம், பௌத்தம், சாங்கியம், யோகம், வைசேடிகம், நியாயம், மீமாம்சை, வேதாந்தம், இராமானுச வேதாந்தம், மத்துவவேதாந்தம், சைவசித்தாந்தம் என்ற சமயங்களை முறைப்படி எடுத்து எழுதப்பட்டுள்ளது. ஒவ்வொரு உட்பிரிவின் பொருளுக்குத்தக்கபடி சிலபல கட்டுரைகளாக எழுதப்பட்டுள்ளது. பௌத்தத்திற்கு ஏழு கட்டுரைகளும், சைவசித்தாந்தத்துக்கு எட்டு கட்டுரைகளும் தரப்பட்டுள்ளன. ஒவ்வொரு சமயத்தையும் எடுத்தெழுதும்போது அவைகளின் பிரமாணங்கள், கோட்பாடுகள், மற்ற சமயங்களுக்குள்ள ஒற்றுமை வேறுபாடுகள் எல்லாம் வெகு தெளிவாக எழுதப்பட்டுள்ளன தமிழ் நடையும் எளிய, இனிய, தூய நடையாயுள்ளது முக்கியமாக சைவர்கள் பாராட்ட வேண்டியது யாதெனின், ஆங்காங்கே பலவிடங்களில் சைவசித்தாந்தத்தின் உண்மைகளை எடுத்துக்காட்டி அதன் திறத்தை உணர்த்தியதாகும். இந்நூலுக்கு ஓர் அழகிய அணிந்துரை தந்துள்ள ஸர் சி. பி. ராமசுவாமி அய்யரவர்கள் "வேதாந்தத்தின் கண் காணப்படும் மாயாவாதம் பற்றிய ஆராய்ச்சி, சைவசித்தாந்தம் — அதன் விருத்தி அதிலிருந்துண்டான பல சமயங்கள் ஆகியவற்றின் பூரணமான விளக்கம் என்னுமிவ்விரண்டுமே தாங்கள் இந்நூல் வாயிலாக அறிந்தவற்றுள் தலைசிறந்தன என்பது என் கருத்து" என விதந்து கூறியுள்ளார்கள்

ஆசிரியர் நடுவு நிலை கொண்டே ஒவ்வொரு சமயத்தின் சிறப்பு, குறைபாடுகள், முரண்கள் முதலியவற்றை ஆராய்ந்துள்ளார். வேறு தத்துவ ஆசிரியர்களின் கருத்

துக்களையும் ஆராய்ந்து நோக்காது அவர் ஏற்றுக்கொள்வதில்லை. உதாரணமாக பௌத்தத்தைப் பற்றிய கட்டுரையில், 'பொருந்தா உரைகல்' என்ற தலைப்பில் பின் வருமாறு அவர் கூறியுள்ளார். "இந்திய தத்துவ தரிசனங்கள் அனைத்துக்கும் மூல ஒற்றுமைகளைக் கண்டு அவற்றைப் பெருப்பித்துக் காட்டும் முயற்சியில் ஈடுபடும் ராதாகிருஷ்ணனும் அவரைப் பின்பற்றுவோரும் வேதாந்தத்தையே தலைமைத் தரிசனமாகக் கொண்டு அதனையே ஏனைய தரிசனங்களை மதிப்பிட ஓர் உரைகல்லாகவும் உபயோகிக்கின்றனர். இந்நிலை முழுதாக ஏற்றுக்கொள்ளத் தக்கதன்று. இம்முறையே ஏனைய தரிசனங்களை உள்ளபடி உணர்வதற்குப் பல சமயங்களில் தடையாக அமைந்துவிடுகின்றது" (பக்கம் 69) இந்து மதப்பிரிவுகளுள் தலையாய ஒன்ருகிய சைவசித்தாந்தம் ஏனைய இந்திய தரிசனங்களைக் கொள்கையொற்றுமை வேற்றுமை நோக்கி அகச்சமயம், அகப்புறச்சமயம், புறச்சமயம், புறப்புறச்சமயம் என்று பிரிவுபடுத்தியதே முறையென்று ஆசிரியர் எடுத்துக் கூறியுள்ளார். ஆசிரியரின் சைவசித்தாந்தப் பயிற்சியும் அழுத்தமான பற்றும் பல பல இடங்களிலே தெளிவாக விளங்குகின்றன. சைவ சித்தாந்தத்துக்கு எட்டு கட்டுரைகள் எழுதியுள்ளதும் அதன சிறப்பைப் பொறுத்தே என்று உணரப்பெறும். அத்தகைய வேறுபாடுகளைப் பற்றிப் பேசும்போது ஆசிரியர் கடைசியொடுக்கத்தில் உள்ளது ஒன்றே ஒன்றுதான்; இரண்டல்ல என்னும் அத்துவிதக் கொள்கையைச் சங்கரர், இராமனுசர், மத்துவர், சைவசித்தாந்திகள் ஆகிய நால்வருமே ஒப்புக்கொள்ளுகின்றனர்" என்று எழுதியுள்ளார். (பக்கம் 314) சைவ சித்தாந்தக் கொள்கையைப் பற்றிப் பின்னே அவர் தெளிவுபடுத்தியிருந்தாலும் மேற் கூறிய வாசகம் சித்தாந்தத்தைப் பொறுத்தமட்டில் ஏகதேச உண்மைதான் எனறு கூறவேண்டும். தத்துவங்களைப் பற்றிக் கூறுமிடத்து ஆசிரியர் முப்பத்தாறு தத்துவங்களுள் ஒவ்வொன்றும் எவ்வெவ்விதமாகப் பயன்படுகின்றது என்பதை விளக்கி, அவையாவுமே இன்றியமையததான என்பதற்குத் தக்க காரணங்கள் கூறுகின்றனர்

அவைகளை நாம் இங்கு விவரிக்கவில்லை. என்று எழுதியுள்ளார் (பக்கம் 395). இது விரிவஞ்சி விடப்பட்டது போலும்.

ஆசிரியர் இந்த நூலில் தம் கருத்துக்களை ஐயமின்றி அச்சமின்றித் தெளிவாக எழுதியுள்ளது அவரது படிப்பின் மேல் தரத்தைக் காட்டுகிறது.

இந்த இந்திய தத்துவ ஞான விரிவு நூல் ஏனையோர்க்கும் பயன்படக்கூடிய ஒரு நூல் என்பதில் ஐயமில்லை. எனினும் சைவசித்தாந்திகள் முக்கியமாகப் படிக்க வேண்டிய ஒரு நூல் என்று திண்ணமாகக் கூறலாம். தத்துவ அறிவை விரிவு செய்வதற்கும் சித்தாந்தத்தின் சிறப்பை உரைப்பதற்கும் இது ஒரு அரிய கருவி. பல விடங்களிலே சித்தாந்த வகுப்புகளும், கல்லூரிகளும் வகுக்கப்படும் இந்நாளிலே இந்த நூல் மாணவர்களுக்குப் பெரிய உதவியாயிருக்கும். தாய்மொழியில் கல்லூரிப் பயிற்சி ஏற்படுத்தப்படும் இந்நாளிலே இந்நூல் வெளி வந்தது நல்லவாய்ப்பு. சென்னைக் கல்லூரி தமிழ் பயிற்சி மொழிக் குழுவினர் இந்த நூலை பி. ஏ. வகுப்புக்குப் பாட புத்தகமாகத் தேர்ந்தெடுத்து ஒரு பரிசும் ஆசிரியருக்கு அளித்துள்ளார்கள். மேலும் இலங்கை அரசாங்கமும் ரூ. 1000 இந்நூலுக்குப் பரிசு தந்துள்ளார்களென்பது மகிழ்ச்சிக்குரியது தமிழுலகும் சைவ உலகும் இத்தகைய ஆசிரியர்களை ஆதரிக்கவேண்டும்.

இந்நூலை நாம் மிகவும் பாராட்டுகிறோம். சைவர்கள் இதைப் படித்துப் பயனடைவார்களாக. இலங்கையிலும் தமிழ்நாட்டிலும் தொடர்பு பெற்ற ஒரு நல்ல சைவ குடும்பத்திலே உதித்த இந்நூலாசிரியர் மேன்மேலும் இத்தகைய நூல்களை எழுதி உதவ இறைவனை வேண்டுகிறோம்.

இந்திய தத்துவ ஞானமென்னும் செம்பொருள் நூல்
செந்தமிழில் நன்கு தெளிந்தளித்தான்,— அந்தண்மை
மிக்கொளிரும் லக்ஷ்மணன்ஆம் வித்தகன். வாழ்க ! அவன்
தக்க பலநலங்கள் சான்று.

— ந. ரா. முருகவேள்,

# செய்திச் சுருக்கங்கள்

## "திருநாவுக்கரசு நாயனார்" திருநாள்

29. 4. 62 ல் திரிசிரபுரச் சைவ சித்தாந்த சபையில், திருநாவுக்கரசு நாயனார் திருநாள் திருச்சி மண்டி திரு. ந. ச. சு. கணபதியா பிள்ளை பேராதரவில் மிகச் சிறப்பாகக் கொண்டாடப்பெற்றது.

அன்று காலை திருநாவுக்கரசு நாயனாருக்கு ஆராதனையும், மகேஸ்வர பூஜையும், மாலையில் அண்ணாமலைப் புலகலைக் கழகவிரிவுரையாளர் "சைவப்பெரு நாவலர்" வித்துவான் திரு. நடேச முதலியார் அவர்களால் "திருநாவுக்கரசு திருத்தொண்டு" என்ற தலைப்பில் ஓர் விரிவுரையும் நடைபெற்றன. சபைச் செயலாளர் திரு. சிவப்பிரகாசம் நன்றி கூறினார்.

**திருநாவுக்கரசர் திருநாள்:** 29-4-62 ஞாயிறு மாலை 7மணிக்குத் திருமயிலைக் கபாலீசுவரர் கோவிலில், சமாஜத் தலைவர் திரு. G. M. முத்துசாமிபிள்ளை I. A. S. (Retd) அவர்கள் தலைமையிற் சமாஜச் சார்பிற் சிறப்புறக் கொண்டாடப் பெற்றது. புதுக்கல்லூரித் தமிழ்ப் பேராசிரியர் திரு. **பாலூர் கண்ணப்ப** முதலியார் M. A., B. O. L, அவர்கள் "அப்பர் அருள் மொழி" என்னும் பொருள்பற்றிச் சிறந்ததொரு சொற்பொழிவு ஆற்றினார்கள். செயலர் திரு. G. **கலியாணம் பிள்ளை**, M. A. அவர்கள் நன்றி நவில, இறைவணக்கத்துடன் விழா இனிது நிறைவேறியது.

**சைவ சித்தாந்த மெய்கண்ட சாத்திர விரிவுரை:** இராயப்பேட்டை திரு. வி. க. மணிமண்டபத்தில் 25. 4. 62 மாலை 7 மணிக்கு அற நிலைய அமைச்சர் கனம் M. பக்தவத்சலம் அவர்கள் துவக்கிவைத்தார்கள். திரு. அ. ச. ஞானசம்பந்தம் M. A. அவர்கள் "உண்மை விளக்கம்" என்னும் பொருள்பற்றிச் சொற்பொழிவாற்றினார்கள். 26-4-62ல் புரிசை-திரு. முருகேசமுதலியார் அவர்கள் "உண்மைவிளக்கம்" என்னும் நூல்பற்றித் தொடர்ந்து விரிவுரை நிகழ்த்தினார்கள்.

திருமுறை விழா: கொழும்பு விவேகானந்த சபையின் சார்பில், ஸ்ரீ விவேகானந்தர் நூருவது பிறந்ததின விழாவை ஒட்டி, 20, 21, 22-4-1962 தேதிகளில், மூன்று நாட்கள் சிறப்புறக் கொண்டாடப் பெற்றன. திருவாளர்கள்; பொ ஸ்ரீஸ்கந்தராஜா, இரா, சபாநாயகம், ஆ. செ. நடராசா, கோ. ஆழ்வாப்பிள்ளை C. C. S., தேசிகமணி அருணாசல ஆசிரியர், முதலியார் செ. சின்னத்தம்பி, க, செல்லத்தம்பி, பண்டித வித்துவான் கா. பொ இரத்தினம், M. A., B. O. L,, வழக்கறிஞர் வே. நாகலிங்கம் J. P., U. M., பண்டிதை சத்தியதேவி துரைசிங்கம், சேர். கந்தையா, வைத்தியநாதன் ஆர் கந்தையா, M. A. லக்ஷ்மணன் M. A., மு. வைரவப்பிள்ளை ஆகிய பெருமக்கள் பலர் கலந்து கொண்டனர். ச மார்க்கண்டேயா, வே. சிவஞானம், செல்வியர்; யோகா சிவசுப்பிரமணியம், ஞானு சிவசுப்பிரமணியம், தனலக்ஷ்மி இராமச்சந்திரா, புவனேஸ்வரி இராமச்சந்திரா, வைத்திய கலாநிதி இரத்தினதேவி நல்லசேகரம் ஆகியோர் பலர் இடையிடையே திருமுறை இசை விருந்தளித்தனர், இந்தியாவில் இருந்து தவத்திரு குன்றக்குடி அடிகளார், 'கலைமகள்' ஆசிரியர் கி. வா. ஜெகந்நாதன், M.A. சிவ. பிருந்தாதேவி அம்மையார், புலவர் ந. ரா. முருகவேள் ஆகியோர் அழைக்கப்பட்டுப் பல்வேறு இடங்களில் பற்பல சொற்பொழிவுகள் ஆற்றி மகிழ்வித்தனர். சபையின் விழாச் செயலர் திரு. மு. சிவராசா, திரு. இராஜபுவனேஸ்வரன் திரு சி. இராசதுரை (பொதுச் செயலாளர்) முதலியோர் விழாவின் வெற்றிக்காக மேற்கொண்ட உழைப்பும் தொண்டும் பெரிதும் பாராட்டுதற்குரியன.

---

Printed at the Sengunthamithran Press, 33, Armenian St, Madras-1 by V. Sambandan, Edited by Pulavar Murugavel, M.A., M.O.L. and Published by S. Satchidanandam Pillai, B.A., L.T., for the Saiva Siddhantha Maha Samajam, 12, East Mada St., Mylapore, Madras-4.